











පරිසර අමාත්‍යාංශය
சுற்றாடல் அமைச்சு
Ministry of Environment

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව 2023

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2023

Annual Performance Report 2023



வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
2023

சுற்றாடல் அமைச்சு

சுற்றாடல் அமைச்சு

சுற்கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல அவர்கள்
றாடல் அமைச்சர்

அமைச்சின் பிரதான

வைத்தியர் திரு அனில் ஜாசிங்க
செயலாளர்

செல்வி பீ கே எஸ் சுபோதினி
மேலதிக செயலாளர் - நிர்வாகம்

திருமதி ஆர் எச் எம் பீ அபேகோன்
மேலதிக செயலாளர் - சுற்றாடல் கொள்கைகள் மற்றும் திட்டமிடல்

திரு டப்ளியு டீ எஸ் சீ வெலிவத்த
மேலதிக செயலாளர் - இயற்கை வளங்கள்

திரு பீ முதலிகே
பணிப்பாளர் நாயகம் - திட்டமிடல்

திருமதி டப்ளியூ எஸ் குமாரகம
மேலதிக செயலாளர் - சுற்றாடல் கருத்திட்டங்கள் கல்விப் பயிற்சி

ஆர் டீ எஸ் ஜயதுங்க
மேலதிக செயலாளர் - சுற்றாடல் அபிவிருத்தி

திருமதி சுனேத்திரா பதிரன
பிரதான நிதி உத்தியோகத்தர்

அமைச்சுக்கு உரித்தான அரச மற்றும் சட்ட ரீதியான

மத்திய சுற்றாடல் அதிகார சபை	- திரு வெனுர பிரனாந்து, தலைவர் - தி ரு பீ பீ ஹேமந்த யசிங்க பணிப்பாளர் நாயகம்
புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்	- திரு சஞ்சே பெரேரா, தலைவர் - திரு எச் கே எம் குணசேகர பணிப்பாளர் நாயகம்
வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் தனியார் கம்பனி	- திரு அஹமட் இப்பால் ஹசன் தலைமை நிறைவேற்று அதிகாரி (பதில் கடமையாற்றும்)
வரையறுக்கப்பட்ட இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி	- திருமதி கே எச் எம் எச் அபேரத்ன தலைமை நிறைவேற்று அதிகாரி

உள்ளடக்கம்

			ப. இல
1.		**1 ஆவது அத்தியாயம்**	
	1.1	அறிமுகம்	01
	1.2	அமைச்சின் தொலை நோக்கு மற்றும் செயல் இலக்கு	02
	1.3	சுற்றாடல் அமைச்சின் பிரதானமான பணிகள்	03
	1.4	ஒழுங்கு விதிக் குறிப்பு	04
	1.5	அமைச்சின் கீழான திணைக்களங்கள் / நிறுவனங்கள்	05
	1.6	அமைச்சு / திணைக்களங்கள் / நிறுவனங்களின் கீழான நிதியங்கள்	05
	1.7	வெளி நாட்டு நிதியுதவிகளின் கீழான கருத்திட்டங்களின் தகவல்கள்	05
2.		**2 ஆவது அத்தியாயம் - விருத்தி**	08
	2.1	சுற்றாடல் அமைச்சின் ஒவ்வொரு பிரிவின் மூலமும் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் விருத்தி	08
	2.1.1	சுற்றாடல் கொள்கை பகுப்பாய்வு மற்றும் செயலாற்றுகைத் திட்டம்	08
	2.1.2	இலங்கையின் உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு	09
	2.1.3	காலநிலை மாற்றச் சவால்களை வெற்றி கொள்ளுதல்	10
	2.1.4	வாயு வளங்கள் முகாமைத்துவம்	11
	2.1.5	சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரம்	11
	2.1.6	சுற்றாடல் மாசாக்கக் கட்டுப்பாடு மற்றும் இரசாயனப் பதார்த்த	13
	2.1.7	இயற்கை வளங்கள் பாதுகாப்பு	14
	2.1.8	சுற்றாடல் கல்வி மற்றும் அறிவூட்டுகை	14
	2.1.9	சர்வதேச சூழல் கூட்டிணைப்பு	16
	2.1.10	சுற்றாடல் தினக் கொண்டாட்டம்	18
	2.1.11	நிறுவன ரீதியான செயற்பாடுகள்	19
	2.1.12	உள்ளகக் கணக்காய்வு	20
	2.1.13	சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான பொது மக்களின் முறைப்பாடுகள், மேன் முறையீடுகள் மற்றும் ஊடக அறிக்கைகள் தொடர்பான ஆராய்ச்சி	20
	2.1.14	சட்ட ரீதியான செயற்பாடுகள்	20
	2.2	சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற கருத்திட்டங்களின் விருத்தி	21
	2.2.1	குடி மக்களை அடிப்படையாகக் கொண்ட சுற்றாடல் தொகுதி பிரவேசிப்பின் ஊடாக வனாந்திரங்கள், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறையை ஒருங்கிணைந்ததாக முகாமைத்துவப்படுத்தும் கருத்திட்டம்	22
	2.2.2	இலங்கையில் மொன்ரியல் கூட்டிணைப்பின் ஒழுங்கு விதிகளை செயற்படுத்துதல்	24
	2.2.3	பொளிகுளோரினேட்டட் பைபீனைல் கழிவுகளையும், பொளிகுளோரினேட்டட் உள்ளடங்கிய உபகரணங்களையும் சூழல் நேயமிக்க வகையில் முகாமைத்துவப்படுத்தும் மற்றும் வெளியகற்றும் கருத்திட்டம்	25
	2.2.4	நலன் மிக்க புவிச் சுட்டி கருத்திட்டம்	25
	2.2.5	சமுத்திரக் கழிவு மற்றும் நுண் பிளாஸ்ரிக் : பிளாஸ்ரிக் கழிவுகளை சுற்றாடல் நேயமிக்க வண்ணம் முகாமைத்துவப்படுத்துவதை விருத்தி செய்யும் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுத் தோற்றுவாயைத் தடுத்தல் மற்றும் குறைத்தல்	26
	2.2.6	ஆசிய - பசுபிக் நாடுகளில் ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தப்பட்டு அகற்றப்படுகின்ற பிளஸ்ரிக் மற்றும் அதன் கீழான கழிவுகளை சூழல் நேயமிக்க வகையில் முகாமைத்துவப்படுத்துதல் தொடர்பான கொள் திறன் விருத்தி	27

2.2.7	மினமாட்டா இணக்கப்பாட்டுக்கு உரித்தான விசேட சர்வதேச நிகழ்ச்சித் திட்டம் : இரசம் உள்ளடங்கிய மற்றும் இரசம் கலந்த கழிவுகளை குறைக்கும் பொருட்டான தேசிய கொள்திறன் விருத்த் நிகழ்ச்சித் திட்டம்	27
2.2.8	ஐக்கிய நாடுகளின் பாலைவனமயமாக்கத்தை தடுக்கும் கூட்டிணைப்பின் மேற்பார்வை மற்றும் அறிக்கையிடலை விருத்தி செய்வதற்கு முன் வைக்கும் பொருட்டு பங்குதார நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவர்களின் கொள் திறனை விருத்தி செய்வதுடன் தொடர்புடைய கருத்திட்டம் - உலகலாவிய சுற்றுச் சூழல் வசதிகள் - 7 - Umbrella IV	28
2.2.9	விவசாய, வனாந்திர மற்றும் பிற காணிப் பயன்பாட்டுத் துறை தொடர்பான வெளிப்பாட்டுத் தன்மையின் விருத்தி செய்யப்பட்ட சட்டகத்தை விருத்தி செய்யும் கருத்திட்டம்	29
2.2.10	ஐக்கிய நாடுகளின் பாலைவனமயமாக்கத்தை தடுக்கும் கூட்டிணைப்பு தொடர்பான தேசிய அறிக்கையிடல் செயன் முறை	29
2.3	அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்களின் விருத்தி	30
2.3.1	மத்திய சுற்றாடல் அதிகார சபை	30
2.3.2	புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்	35
2.3.3	ஜீ எஸ் எம் பீ ரெக்னிகல் சர்விசஸ் (தனியார்) கம்பனி	38
2.3.4	வரையறுக்கப்பட்ட இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி	39
3.	**மூன்றாவது அத்தியாயம் - வருடத்தின் முழு மொத்த நிதிச் செயலாற்றுகை**	44
3.1	நிதி செயலாற்றுகைக் கூற்று	44
3.2	நிதி நிலைமை தொடர்பான கூற்று	46
3.3	நிதியோட்டக் கூற்று	47
3.4	நிதியோட்டக் குறிப்புகள்	48
3.5	வருமான ஒன்று திரட்டுதலின் செயலாற்றுகை	48
3.6	ஒதுக்கப்பட்ட நிதியங்களை ஒன்று சேர்க்கும் செயலாற்றுகை	49
3.7	நி. பி 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத் திணைக்களத்துக்கு / மாவட்டச் செயலகத்துக்கு / மாகாண சபைகளுக்குக் கையளிக்கப்பட்ட நிதியங்கள்	49
3.8	நிதியற்ற சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடும் செயலாற்றுகை	49
3.9	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	50
4.	**நான்காவது அத்தியாயம் - செயலாற்றுகைச் சுட்டி**	62
4.1	நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி	62
5.	**ஐந்தாவது அத்தியாயம் - பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை (SDG) பூர்த்தி செய்யும் செயலாற்றுகைச் சுட்டி**	62
5.1	அடையாளம் கண்ட தொடர்புடைய பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள்	62
5.2	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதன் வெற்றித் தன்மை மற்றும் சவால்கள்	65
6.	**ஆறாவது அத்தியாயம் - மானிட வளங்கள் திட்டம்**	65
6.1	ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்	65
6.2	நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பாக மானிட வளங்கள் தட்டுப்பாடு அல்லது மேலதிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவது எவ்விதத்தில்	65
6.3	மானிட வளங்கள் விருத்தி	66
7.	**ஏழாவது அத்தியாயம் - இசைவாக்க அறிக்கை**	71


01 ஆவது அத்தியாயம்

1.1 அறிமுகம்

அதிமேதகு சனாதிபதியவர்களினால் வெளியிடப்பட்ட இலக்கம் 2289/43 ஐ உடைய 2022.07.22 ஆந் திகதிய அதி விசேட திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் பிரகாரம், "சுற்றாடல் அமைச்சு" நிலை நாட்டப்பட்டது. இவ் அமைச்சுக்கு சுற்றாடல் மாசாக்கத்துடன் தொடர்புடைய தேசிய மற்றும் சர்வதேச இணக்கப்பாடுகளை விருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் பேண்தகு பொருளாதார விருத்திக்கு இசைவாகக் கூடிய வகையில் சுற்றாடல் கொள்கைகள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளை முன்னெடுத்தல் போன்ற பணிகள் கையளிக்கப்பட்டுள்ளன. சுற்றாடல் அமைச்சின் அமைச்சராக தற்சமயம் கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல அவர்கள் கடமையாற்றுகின்றார்.

சுற்றாடல் மாறுபாடுகள் மற்றும் காபன் பயன்பாட்டைக் குறைக்கும் பொருளாதாரத்துடன் கூடிய பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு சுற்றாடல் விடயப் பரப்புடன் தொடர்புடைய கொள்கை உறுவாக்கம், தேசிய பாதீட்டு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி செயன் முறைகளின் கீழான கருத்திட்டங்களை செயற்படுத்துதல் போன்ற முன்னுரிமை மிக்க செயற்பாடுகளுக்கு சுற்றாடல் அமைச்சு தலைமைத்துவத்தை வகிக்க வேண்டியுள்ளது.

தற்சமயம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள இடர் மிகு நிலைகள் காரணமாக பொருளாதார, சமூக, அரசியல் கட்டமைப்பில் பல்வேறுபட்ட மாறுபாடுகளுக்கு முகங் கொடுக்க வேண்டியேற்பட்டிருப்பதுடன், அது பல்வேறுபட்ட சுற்றாடல் மாற்றங்களில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. இதனால், சுற்றாடலுக்கு ஏற்படக் கூடிய தாக்கங்களைக் குறைத்த வண்ணம் துரித பொருளாதாரப் பிரவேசிப்பு மற்றும் இயற்கை வளப் பயன்பாடு தொடர்பான நலினத் தன்மையைப் பேணிய வண்ணம் நாட்டில் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களின் முகாமைத்துவம் தொடர்பாக சுற்றாடல் அமைச்சும், தொடர்புடைய நிறுவனங்களும் கூட்டிணைந்து முழு மொத்த அரச பொறிமுறையின் நிறுவன, சட்ட ரீதியான மற்றும் தொழில்நுட்ப சட்டகத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு விடயப் பரப்பு உரித்தான அமைச்சரின் தலைமையிலும், ஆலோசனைகளின் பிரகாரமும். செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.



ஆசிய பசிபிக் சுற்றுச்சூழல் அமைச்சர்களின் 5வது மாநாடு - கொழும்பு

அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை, புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம், வரையறுக்கப்பட்ட புளூஆடீ தொழில்நுட்ப சேவைகள் தனியார் கம்பனி மற்றும் இலங்கை கிளைமட் பண்ட் பிரைவட் (லிமிடெட்) ஆகிய நிறுவனங்களுடன் சுற்றாடல் அமைச்சு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகள் வேகமடைவதல்;, மக்களின் வாழ்க்கை முறைமை மாற்றமடைதல்;, காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கங்களை குறைப்பதற்காக மொத்த அரச பொறிமுறையும் நிறுவன, சட்ட ரீதியான மற்றும் தொழில்நுட்ப சட்டகத்தை வலுவாக்கம் செய்துகொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிலைபேறாக மற்றும் சிக்கனமாகக் கட்டியெழுப்புவதற்காக விசேட பணியொன்றை ஆற்றுகின்றது.

இந்த அறிக்கை மூலம் சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்கள், அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் கருத்திட்டங்கள் மூலம் 2023 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி மற்றும் பேணிப்பாதுகாத்தல் பணிகள் தொடர்பாக விரிவான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1.2 அமைச்சின் தொலை நோக்கு , அமைச்சின் செயல் இலக்கு

அமைச்சின் தொலை நோக்கு

"பேண்தகு வகையில் அபிவிருத்தியடைந்த இலங்கை"

அமைச்சின் செயல் இலக்கு

இயற்கை வளங்களை நன்னெறி மிக்கதாக முகாமைத்துவப்படுத்துவதன் ஊடாக சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்திய வண்ணம் பேண்தகு சுற்றாடல் முகாமைத்துவத்துக்கு தலைமைத்துவத்தை வழங்குதல்.

1.3 சுற்றாடல் அமைச்சின் பிரதானமான பணிகள் :

⇒ அரசினால் செயற்படுத்தப்படுகின்ற தேசிய கொள்கைகளின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சின் விடயப் பரப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள் தொடர்பாகக் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்ட தயார்ப்படுத்துகை, செயற்படுத்துகை, மேற்பார்வையிடுகை மற்றூம் மதிப்பீடு.

⇒ அமைச்சின் விடயப் பரப்பின் கீழான பொது மக்கள் சேவைகளை வினைத் திறன் மி க்கதாகவும், பொது மக்களுக்குச் சுமூகமாகவும் முன்னெடுத்தல்.

⇒ நவீன முகாமைத்துவ உத்திகள் மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டின் ஊடாக அனைத்து சேவைத் தொகுதிகள் மற்றும் செயன் முறை வழிகாட்டிகளை மறு சீரமைத்தல், அதனூடாக மாசாக்கம் மற்றும் வீண் விரயத்தைப் போக்கிய வண்ணம் அமைச்சின் செயற் பணிகள் நி றைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துதல்.

⇒ சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பேண்தகு முகாமைத்துவம் தொடர்பான கொள்கைகளையும், தி ட்டங்களையும் தயாரித்தல்.

⇒ நடப்பு மற்றும் எதிர்க்கால சந்ததியினருக்கு சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச கூட்டிணைப்புகளை விருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

⇒ சுற்றாடல் மாசாக்கத்துக்கு எதிராகப் போரிடும் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்.

⇒ குறைந்த சுற்றாடல் மாற்றங்கள் மற்றும் காபன் பயன்பாட்டைக் குறைக்கும் பொருளாதாரத்துடன் கூட்டிணைந்த பேண்தகு அபிவிருத்தியை நிலை நாட்டும் பொருட்டு கொள்கை உறுவாக்கம், சட்ட உறுவாக்கம் மற்றும் உபாய வழி செயற்படுத்துகை.


⇒ பேண்தகு சுற்றாடல் கோட்பாட்டின் முக்கியத்துவம் தொடர்பாகப் பொது மக்களிடையே சாதகமான கருத்துக்களை உறுவாக்குதல்.

⇒ சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு உரிமங்களை வெளியிடுதல் மற்றும் அச் செயற்பாட்டை மதிப்பீடு செய்தல்.

⇒ இலங்கையினால் கைச்சாடிடப்பட்டுள்ள பல் தரப்பு சுற்றாடல் இணக்கப்பாடுகளின் பிரகாரம் இலங்கையினால் முன்னெடுக்க வேண்டிய சர்வதேச கூட்டிணைப்புகள் நி றைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துதல்.

⇒ அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்குக் கையளி க்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயப் பரப்புகளுடனும் தொடர்புடைய செயற் பணிகள்.

1.4 அமைச்சின் நிறுவன விளக்கப்படம் - சுற்றாடல் அமைச்சு



:1.5 அமைச்சின் கீழான திணைக்களங்கள் / நிறுவனங்கள் :

- மத்திய சுற்றாடல் அதிகார சபை
- புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்
- வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி
- இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி

1.6 அமைச்சு / திணைக்களங்கள் / நிறுவனங்களின் கீழான நிதியங்கள் - இல்லை

அ) கருத்திட்டத்தின் பெயர்	**1. குடிகளை மையமாகக் கொண்ட சுற்றாடல் தொகுதி பிரவேசிப்பின் ஊடாக வனாந்திர, விவசாய மற்றும் சுற்றுலாத் துறைகளை ஒன்று சேர்த்து முகாமைத்துவப்படுத்தும் கருத்திட்டம்**
ஆ) பங்களிப்பு செய்கின்ற பிரதிநிதி	**உலகலாவிய சுற்றாடல் வசதிகள் (GEF)**
இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு	ரூபா 635.9 மில்லியன்
ஈ) கருத்திட்டத்தின் காலப் பகுதி	2021 – 2024
அ) கருத்திட்டத்தின் பெயர்	**2. இலங்கையில் மொன்ரியல் கூட்டிணைப்பின் ஒழுங்கு விதிகளை செயற்படுத்துதல்**
ஆ) பங்களிப்பு செய்கின்ற பிரதிநிதி	பல் தரப்பு நிதியம் MLF
இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு	ரூபா 35 மில்லியன் (2023)
ஈ) கருத்திட்டத்தின் காலப் பகுதி	வருடாந்த நிகழ்ச்சியொன்றாகும்
அ) கருத்திட்டத்தின் பெயர்	**3. இலங்கையில் பொளிகுளோரினேட்டட் பைபீனைல் கழிவுகள் மற்றும் பொளிகுளோரினேட்டட் பைபீனைல் உள்ளடங்கிய உபகரணங்களை சூழல் நேயமிக்க வகையில் முகாமைத்துவப்படுத்தும் மற்றும் வெளியகற்றும் கருத்திட்டம்**
ஆ) பங்களிப்பு செய்கின்ற பிரதிநிதி	**ஐக்கிய நாடுகளின் விவசாய விருத்தி இயக்கம்**
இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு	ரூபா 685.40 மில்லியன்
அ) கருத்திட்டத்தின் பெயர்	**4. சுற்றாடல் மற்றும் சமூக ரீதியாகத் தூண்டல் மிக்க விவசாய சுற்றுச் சூழல் தொகுதியை நிலை நாட்டுவதன் மூலம் நில அழிவைக் குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுவாக்கிய வண்ணம் சுகாதார மிக்க விவசாயிகளையும், சுபீட்சத்தையும் உறுதிப்படுத்துவதற்கான கருத்திட்டம்.**
ஆ) பங்களிப்பு செய்கின்ற பிரதிநிதி	**உலகலாவிய சுற்றாடல் வசதிகள் (GEF)**
இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு	ரூபா 383 மில்லியன்
ஈ) கருத்திட்டத்தின் காலப் பகுதி	2021 – 2023

அ) கருத்திட்டத்தின் பெயர்	5. **கடற் சார் கழிவுகள் மற்றும் நுண் பிளாஸ்ரிக் : பிளாஸ்ரிக் கழிவுகளை சூழல் நேயமிக்க வகையில் முகாமைத்துவப்படுத்துவதை விருத்தி செய்தல் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுத் தோற்றுவிப்பை தடுத்தல் மற்றும் குறைத்தல்.**
ஆ) பங்களிப்பு செய்கின்ற பிரதிநிதி	**அபிவிருத்தி கூட்டிணைப்பு தொடர்பான நோர்வே முகவராண்மை நிறுவனம் (NORAD)**
இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு	ரூபா 10.37 மில்லியன்
ஈ) கருத்திட்டத்தின் காலப் பகுதி	2021 – 2023
அ) கருத்திட்டத்தின் பெயர்	6. **ஆசிய பசுபிக் நாடுகளில் ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தப்பட்டு அகற்றப்படுகின்ற பிளாஸ்ரிக் மற்றும் அதன் கழிவுகளை சூழல் நேயமிக்க வகையில் முகாமைத்துவப்படுத்துதல் தொடர்பான கொள் திறன் கட்டியெழுப்பல்.**
ஆ) பங்களிப்பு செய்கின்ற பிரதிநிதி	அபிவிருத்தி கூட்டிணைப்பு தொடர்பான நோர்வேயின் முகவராண்மை (NORAD)
இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு	ரூபா 5.4 மில்லியன்
ஈ) கருத்திட்டத்தின் காலப் பகுதி	2021 – 2023
அ) கருத்திட்டத்தின் பெயர்	7. **மினமாட்டா கூட்டிணைப்புக்கு உரித்தான விசேட சர்வதேச நிகழ்ச்சித் திட்டம் : இரசம் உள்ளடங்கிய மற்றும் இரசம் கலப்புற்ற கழிவுகளை குறைக்கும் பொருட்டு தேசிய கொள் திறனை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்**
ஆ) பங்களிப்பு செய்கின்ற பிரதிநிதி	**ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் UNEP**
இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு	ரூபா 32.15 மில்லியன்
ஈ) கருத்திட்டத்தின் காலப் பகுதி	2021 - 2024
அ) கருத்திட்டத்தின் பெயர்	8. **ஐக்கிய நாடுகளின் பாலைவனமயமாக்கத்தை தடுக்கும் கூட்டிணைப்பின் மேற்பார்வை மற்றும் அறிக்கையிடலை மேம்படுத்தும் பொருட்டான பங்குதாரி நிறுவனங்களினதும், தொழில் முனைவர்களினதும் கொள் திறனைக் கட்டியெழுப்பு பொருட்டான கருத்திட்டம் - உலகலாவிய சுற்றாடல் வசதிகள் - 7**
ஆ) பங்களிப்பு செய்கின்ற பிரதிநிதி	**உலகலாவிய சுற்றாடல் வசதிகள் (GEF)**
இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு	ரூபா 29.49 மில்லியன்
ஈ) கருத்திட்டத்தின் காலப் பகுதி	2023 - 2025

அ) கருத்திட்டத்தின் பெயர்	9.**விவசாய, வனாந்திர மற்றும் ஏனைய காணிப் பயன்பாட்டுத் துறை தொடர்பாக வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தும் கால ரீதியான சட்டகத்தைத் தயாரிக்கும் கருத்திட்டம்**
ஆ) பங்களிப்பு செய்கின்ற பிரதிநிதி	**உலகலாவிய சுற்றாடல் வசதிகள் (GEF)**
இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு	ரூபா 328.5 மில்லியன்
ஈ) கருத்திட்டத்தின் காலப் பகுதி	2023 - 2024


அ) கருத்திட்டத்தின் பெயர்	10. **ஐக்கிய நாடுகளின் பாலைவனமயமாக்கத்தைத் தடுக்கும் கூட்டிணைப்பிற்கான அறிக்கையிடல் செயற்பாடு**
ஆ) பங்களிப்பு செய்கின்ற பிரதிநிதி	**உலகலாவிய சுற்றாடல் வசதிகள் (GEF)**
இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு	ரூபா 11.5 மில்லியன்
ஈ) கருத்திட்டத்தின் காலப் பகுதி	2019 –2023

2 . ஆவது அத்தியாயம் - விருத்தி

2.1 சுற்றாடல் அமைச்சின் ஒவ்வொரு பிரிவின் மூலமும் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் விருத்தி

2.1.1 சுற்றாடல் கொள்கை பகுப்பாய்வு மற்றும் செயலாற்றுகைத் திட்டம்

தேசிய காலநிலை மாற்றக் கொள்கையை புதுப்பித்தல்




இலங்கையில் மேலெழக் கூடிய காலநிலை மாற்றங்களினாலான அபாய நிலைகள், மாறுபடக் கூடிய தேசிய முன்னுரிமைகள், புதிய உலகலாவிய மேம்பாடுகள் மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்கள், பொறிமுறைகள் மற்றும் பலன்கள் காரணமாக 2012 ஆம் ஆண்டில் உறுவாக்கப்பட்ட தேசிய காலநிலை மாற்றங்கள் தொடர்பான கொள்கை, சுற்றாடல் அமைச்சினால் காலத்துக்கேற்ற தேவைகளின் பிரகாரம் புதுப்பிக்கப்பட்டதுடன், அதற்கான அமைச்சரவையின் அனுமதி 2023 நவம்பர் மாதம் வழங்கப்பட்டது. இதன் வாயிலாகக் காலநிலை மாற்றங்கள் தொடர்பாக இயைபாக்கமடைதல், பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைத்தல், காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படக் கூடிய நட்டங்கள் மற்றும் இலாபகரமான செயற்பாடுகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் இலங்கையில் தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு இலக்குகளை நோக்கி நகரும் பொருட்டும் அனைத்துத் துறை சார் செயற்பாடுகளின் வாயிலாகவும் சர்வதேச இலக்குகள் தொடர்பாகப் பங்களிப்பை வழங்கிய வண்ணம் இலங்கையின் காலநிலை மாற்றங்கள் காரணமாக அபாய நிலைக்கு உள்ளாகக் கூடிய குடிமக்களின் நலன்கள் மற்றும் நாட்டின் பேண்தகு அபிவிருத்தி தொடர்பகப் பங்களிப்பை வழங்குவதற்கும் இடவசதிகள் ஏற்பாடு செய்யப்படும்.

தேசிய கனியக் கொள்கையை புதுப்பித்தல்

நடப்பு கனியக் கொள்கையிலுள்ள குறைகளைப் பூர்த்தி செய்த வண்ணம் இலங்கைக்கு உரித்தான சமுத்திர வலயத்தில் கனிய வளங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள், கனிய ஏற்றுமதியின் போது பெறுமதி ஒன்று சேர்க்கை, கனியங்களுடன் தொடர்புடைய முடிவுப் பொருட் துறையின் மேம்படுத்துகை, கனிய வளங்கள் மற்றும் சுற்றாடலை பேண்தகு வகையில் முகாமைத்துவப்படுத்துதல், கனியப் பிரித்தெடுப்பின் போது மேலெழக் கூடிய காணி உரிமம் தொடர்பான பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்தல் உட்பட மிக முக்கியமான நோக்கங்களாகக் கொண்ட வண்ணம் சுற்றாடல் அமைச்சு, புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்துடன் கூட்டிணைந்து தேசிய கனியக் கொள்கையை தயாரித்துள்ளது.

இலங்கையில் 2050 காபன் பூச்சிய வழி காட்டி மற்றும் உபாய வழித் திட்டத்தை தயாரித்தல்

வரைவுபடுத்தப்பட்ட இலங்கையின் 2050 காபன் பூச்சிய வழி காட்டி மற்றும் உபாய வழித் திட்டம் தொடர்பாக 2023 நவம்பர் 27 ஆந் திகதி அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், காபன் பூச்சிய நிகர வழி காட்டி மற்றும் உபாய வழித் திட்டம் காலநிலை மாற்றங்கள் தொடர்பான செயலகத்தின் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டியையும், உபாய வழித் திட்டத்தையும் ஒவ்வொரு 5 வருடத்துக்கொரு முறையும் மதிப்பீடு செய்து புதுப்பித்தல் நடவடிக்கை எடுக்கப்படும்.



சுற்றுச் சூழல் தூண்டல் மிக்க பிரதேசங்கள் தொடர்பான தேசிய கொள்கை

இலங்கையின் சுற்றுச் சூழல் தூண்டல் மிக்க பி ரதேசங்கள் தொடர்பான தேசிய கொள்கை, ஒதுக்கீட்டுப் பிரதேச வலையமைப்பிற்குப் புறம்பாகவுள்ள சுற்றாடல் தூண்டல் மிக்க பி ரதேசங்களை வினைத் திறன் மிக்கதாகப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்தும் பொருட்டு ஆலோசனைகளை வழங்கிய வண்ணம் சுற்றாடல் சமூக - பொருளாதார உள்ளடக்கங்களுடன் கூட்டிணைந்த விசேட பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ பிரவேசிப்பின் ஊடாக பேண்தகு சுற்றுச் சூழலைக் கட்டியெழுப்பும் பொருட்டு உறுவாக்கப்பட்டுள்ளது. இத் தேசிய கொள்கை 2023 நவம்பர் 16 ஆந் திகதி சுற்றாடல் அமைச்சினால் வெளியிடப்பட்டது.



2.1.2 இலங்கையின் உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு



தம்புல்லையிலுள்ள பொப்பம் ஆர்பொரேற்டம் எனும் இடத்தை இராப் பகல் சுற்றாடல் சுற்றுலாப் பயண இடமாக விருத்தி செய்யப்பட்ட பிற்பாடு இயற்கை சுற்றாடலுக்கு ஆர்வம் காட்டுவோருக்கு மீண்டும் தி றக்கப்பட்டது.

சுற்றாடல் அமைச்சினால் பொப்பம் ஆர்பொரேற்டம் எனும் இடத்தில் காணப்பட்ட உயிரினங்களின் (தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள்) பெறுமதி தொடர்பாகக் கவனம் செலுத்தப்படு வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை இலக்கிட்ட வண்ணம் அதனை சுற்றாடல் சுற்றுலாத்து துறைத் தளமாக விருத்தி செய்வதற்குத் தேவையான நிதியங்கள் தேசிய அடிப்படைக் கற்கை நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. அவ் அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்த பிற்பாடு மீண்டும் அது உள் நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு 2023.07.20 ஆந் திகதி தி றந்து வைக்கப்பட்டது.

கடல் புற்களை டுரோன் வரைபடமாக்கும் பணிப் பட்டறை

உலக கடற் சார் புற்கள் தினத்தையொட்டி, சுற்றாடல் அமைச்சினால் ஸ்ரீ லங்கன் விமான சேவை, வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், புலூ ரிசோர்ட் டிரஸ்ட் நிறுவனம் மற்றும் ஏனைய தொடர்புடைய பங்குதார நிறுவனங்களுடன் கூட்டிணைந்து 2023 மார்ச் 2 மற்றும் 3 ஆகிய இரு தினங்களிலும், கடற் சார் புற்களை டுரோன் வரைபடமாக்கும் பணிப் பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டது.




சர்வதேச உயிர்ப் பல்வகைமை நாள் கொண்டாட்டத்துடன் தொடர்புடையதாக 2023 மே 23 ஆந் திகதி மன்னார் மாவட்டத்தின் தொடர்புடைய அரச உத்தியோகத்தர்களுக்குக் கண்டல் தாவர இனங்களை அடையாளம் காணுதல், இலங்கை கண்டல் தாவர சூழல் தொகுதிகளை மீள் கட்டமைக்கும் பொருட்டு தேசிய வழிகாட்டல் குறிப்பை பயன்படுத்துதல் தொடர்பாகவும், இலங்கையின் கண்டல் தாவர சூழல் தொகுதியப் பாதுகாக்கும் பொருட்டு காணப்படுகின்ற சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பான பயிற்சிப் பணிப் பட்டறை வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் பங்களி ப்புடன் நடாத்தப்பட்டது. இப் பணிப் பட்டறைக்குத் தொடர்புடைய பங்குதார நிறுவனங்களை பிரதி நிதி த்துவப்படுத்தும் முகமாக கிட்டத்தட்ட 60 உத்தி யோகத்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

மல்வது ஓய பள்ளத்தாக்கை அண்டிய கண்டல் தாவரத் தொகுதியை மீள் நிலை நாட்டும் கருத்திட்டம்

2023 ஜூலை 21 ஆந் திகதி வன பராமரிப்புத் தி ணைக்களம், இலங்கை கடற் படை மற்றும் குடி மக்களது பங்கேற்புடன் மன்னார் மாவட்டத்தின் "சி லாவதுர" பிரதேசத்தில் கண்டலை மீள் நிலைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

2.1.3 காலநிலை மாற்றச் சவால்களை வெற்றி கொள்ளுதல்

தேசிய ரீதியான நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பை செயற்படுத்தும் திட்டம் (NDCs 2021 - 2030)



புதுப்பிக்கப்பட்ட தேசிய ரீதியானத் தீர்மானிக்கப்பட்ட செயலாற்றுகைத் திட்டம் பங்குதாரர்களினதும் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்டது. இத் திட்டம் முதலீட்டு வாய்ப்புகளுக்குக் கருத்திட்ட முன் மொழிவுகளை முன் வைத்த வண்ணம் விருத்தியை எய்தக் கூடியதொரு விடயமாகக் காணப்படுகின்றது. இன்றளவில் 2021 - 2022 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக GHG கணிப்பீடு தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. 2021 - 2022 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாகத் தேசிய ரீதியான நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு (NDCs) ஒவ்வொரு பிரிவுகள் தொடர்பாகவும் விருத்தி நிலையை அடைந்துள்ளது.

காலநிலை மாற்றங்களை மாகாண அபிவிருத்தி தொடர்பாக உள்ளீர்த்தல் மற்றும் மாகாணங்களின் அடிப்படையில் இயைபாக்கத் திட்டங்களை தயாரித்தல்

தேசிய இயைபாக்க முன் ஆயத்த நிதி (NAP Readiness) கருத்திட்டத்தின் கீழ் மாகாணங்களின் பெயர்கள் தொடர்பாக மாகாண இயைபாக்கத் திட்டங்கள் (Provincial Adaptation Plans) தயாரிக்கப்பட்ட வண்ணமுள்ளன. மாகாணத்தின் விசேட காலநிலை சார்ந்த பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு எடுக்க வேண்டிய செயற்பாடுகளை அடையாளம் கண்டு ஒவ்வொரு மாகாணத்துக்கு விசேடித்த திட்டங்களைத் தயாரிக்கும் செயற்பாடுகள் இதன் கீழ் முன்னெடுக்கப்படும். அனைத்து மாகாணங்களினதும் மாகாண இயைபாக்கத் திட்டங்கள் தொடர்பாக முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது சுற்றின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் மதியுறை சார்ந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதனடிப்படையில், மாகாணப் பெயர் தொடர்பாக இயைபாக்கத் திட்டங்கள் வரைவுபடுத்தப்பட்டு நிறைவடைந்திருப்பதுடன், செல்லுபடித் தன்மையை உறுதிப்படுத்திய பிற்பாடு அவற்றை செயற்படுத்துவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன

காலநிலை மாற்றங்களை மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக உள்ளீர்த்தல்

இதற்கென அனைத்து மாகாணங்களிலும் மாகாண காலநிலை சபைகள் (Provincial Climate Board- PCB) மற்றும் மாகாண காலநிலை அலகுகள் (PCU) நிலை நாட்டப்பட்டுள்ளன. இதன் போது காலநிலை மாற்றங்கள் தொடர்பாகத் தீர்மானமெடுக்கும் பொருட்டு மாகாண காலநிலை சபைகள் செயற்பட்ட வண்ணமிருப்பதுடன், மாகாண பிரதான செயலாளர் இக் குழுவின் தலைவராகவும், தொடர்புடைய ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களாகவும் செயற்படுகின்றனர். காலநிலை மாற்றங்கள் மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக உள்ளீர்க்கும் பொருட்டு வழி காட்டல் குறிப்பொன்றும், மாகாண காலநிலைத் தகவல் தொகுதியின் நிலை நாடுகை, அது தொடர்பாகவும், மாகாண அபாய மதிப்பீடு மற்றும் வரைபடமாக்கும் பொருட்டு உலகலாவிய தகவல் தொகுதிகள் (GIS) ஆகிய குறி காட்டிகளின் பயன்பாடு தொடர்பாக மாகாணங்களின் மாகாண காலநிலை அலகுகளின் (PCU) அங்கத்தவர்களுக்குக் கொள்திறன் கட்டியெழுப்பல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒன்பது மாகாணங்கள் சார்பாகவும் நடாத்தப்பட்டன.

பசுமைக் காலநிலை நிதியம் (GCF) தொடர்பாகக் கருத்திட்ட கோட்பாட்டுப் பத்திரத்தை கட்டியெழுப்புதல்

பசுமைக் காலநிலை நிதியத்திடமிருந்து (GCF) நிதியங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு கருத்திட்ட முன் மொழிவை விருத்தி செய்யும் செயற்பாடுகள் தேசிய ரீதியானப் பெயரிடப்பட்ட அதிகார சபையினால் விருத்தி செய்யப்படும், அதன் பிரகாரம்,

- உலக உணவு மற்றும் விவசாய இயக்கம் (FAO) மீனவத் துறை கோட்பாட்டுக் குறிப்பு பசுமைக் காலநிலை நிதியத்துக்கு நடுத்தர அளவிலான கோட்பாட்டுக் குறிப்பு வரை மேலுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- சூரிய வலுச் சக்தி மற்றும் இலத்திரனியல் ஓட்டம் (E - mobility) கருத்திட்டம் தொடர்பான கோட்பாட்டுக் குறிப்புகளுக்கு கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கப்பட்ட மதிப்பீடு தொடர்பாக UNDP நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டது.

- சுகாதார மற்றும் சுற்றுலாத் துறை சார்ந்த கோட்பாட்டுக் குறிப்பை விருத்தி செய்யும் பொருட்டு தேசிய ரீதியாகப் பெயரிடப்பட்ட அதிகார சபையின் நிபுணத்துவக் குழுக்களின் (“NDA core group) கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

- "கருத்திட்டக் கருத்துறை முன்னுரிமைப்படுத்துகை பணிப் பட்டறை" நடாத்தப்பட்டது.

கோட்பாட்டுப் பத்திரம் எழுதுதல் தொடர்பாகக் கொள்திறன் கட்டியெழுப்புகை பணிப் பட்டறைகள்

இப் பயிற்சியின் நோக்கமாக GCF நிதியங்களின் கீழான முன் மொழிவுகளை அடையாளம் காணுதல் மற்றும் விருத்தி செய்தல், கருத்திட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாட்டுக் குழுவின் தாங்கு திறன் தொடர்பாக அங்கத்தவர்களுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் GCF கோட்பாட்டுக் குறிப்பு வரை விருத்தி செய்யக் கூடிய கருத்திட்ட முன் மொழிவுகளுக்கு கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு விடயப் பரப்புகளை அடையாளம் காணுதல்.

கருத்திட்ட முன் மொழிவு அபிவிருத்திக் குழுவினால் தயாரிக்கப்பட்ட முன் மொழிவுகள் மதியுறையாளர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டது.

அவ்வாறே, GCF கருத்திட்டத்தை தயாரிக்கும் பொருட்டு பிரதான கொள் திறனின் கீழ் பாலின சம பங்குடைமை பணிப் பட்டறையொன்று நடாத்தப்பட்டது. பெயரிடப்பட்ட நேரடிப் பிரவேசிப்பு நிறுவனங்கள் தொடர்பாக GCF சுற்றாடல் மற்றும் சமூக ரீதியான பாதுகாப்பு தொடர்பான பணிப் பட்டறையொன்று நடாத்தப்பட்டது. மேலும், இலங்கை தொடர்பாக 'Vision Setting Workshop on Climate-Smart Green Growth Strategy for Sri Lanka' எனும் பெயரில் தேசிய பணிப் பட்டறையொன்று நடாத்தப்பப்பட்டது.

2.1.4 வாயு வளங்கள் முகாமைத்துவம்

வாயு வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான தேசிய முன்னெடுப்புக் குழு மற்றும் தேசிய தொழில்நுட்பக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

இக் கூட்டங்கள் 2023.01.11 ஆந் திகதி நடாத்தப்பட்டதுடன், இடஞ் சார் மூலாதாரங்களின் ஊடாக ஏற்படக் கூடிய உமிழ்வைக் கட்டுப்படுத்துதல், குடியியல் வாயுத் தராதர முகாமைத்துவம், வாயுத் தராதர மேற்பார்வை, வாயுத் தராதர முகாமைத்துவம் தொடர்பாக அறிவூட்டுகை மற்றும் கொள் திறன் அபிவிருத்தி போன்ற துறைகள் தொடர்பாகக் கொள்கை ரீதியாக தீர்மானமெடுக்கப்படும்.

இலங்கையின் பேண்தகு மற்றும் வினைத் திறன் மிக்க மின்னியல் மாற்றீட்டுத் தொகுதியை கட்டியெழுப்பும் பொருட்டான கருத்திட்டம்.

பரிஸ் உடன்ப் படிக்கையும் உள்ளடங்களாகக் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சர்வதேச கூட்டிணைப்பைக் கட்டியெழுப்பு பொருட்டு பசுமை வீட்டு வாயு உமிழ்வு பூச்சிய மற்றும் மிகக் குறைந்த உமிழ்வுச் சுற்று தேவைப்படுவதுடன், போக்குவரத்துத் துறையில் வலுச் சக்தியுடன் தொடர்புடைய காபனீரொக்சைட்டு உமிழ்வின் 1/4 அளவு பங்களிப்பு செய்யப்படும். அது 2050 ஆம் ஆண்டளவில் 1/3 வரை விருத்தியடைவதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது. 2050 ஆம் ஆண்டளவில் வாகன அணி வகுப்பு இரண்டு மடங்காவதாகவும், குறைந்த மற்றும் நடுத்தர வருமானமீட்டும் பல நாடுகளில் இந் நிலையை அடையாளம் காணக் கிடைக்குமெனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது

கருத்திட்டத்துன் தொடர்புடைய தேசிய திட்டமிடல் திணைக்களத்தின், வெளி நாட்டலுவல்கள் அமைச்சின், சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருப்பதுடன், கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான அமைச்சரை அனுமதியை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவடைந்த பிற்பாடு இது தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாடிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கொழும்பு நகர ஆளுகைப் பிரதேசத்தின் வாயுத் தராதர முகாமைத்துவம் தொடர்பான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு உபாய வழி மற்றும் கொள்கை மேம்படு த்துகை தொடர்பான கொள்திறன் விருத்திக் கருத்திட்டம்.

இலங்கையில் வாயுத் தர நிலையை நிர்ணயிக்கும் பொருட்டு மூன்று தன்னியக்க வாயுத் தராதர அளவீட்டு உபகரணங்கள் பத்தரமுல்ல, கொழும்பு மற்றும் கண்டி ஆகிய நகரங்களில் நிலை நாட்டப்பட்டுள்ளன. இதன் வாயிலாக வளியில் காணப்படுகின்ற PM-10, PM-2.5,NOX, SOX, CO,O3 தொடர்பான தரவுகள் வெளிக் காட்டப்படும்.

இலங்கையில் ஒரு சில நகர்ப்புற பிரதேசங்களில் ஒரு சில நாட்களில் சுற்றோட்டத்திலுள்ள வாயு, PM10 மற்றும் PM2.5 இணக்கப் பெறுமானங்களை விட அதிகளவில் காணப்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்திலெடுத்த வண்ணம் பிரான்ஸ் நாட்டு அரசினால் கொழும்பு நகர்ப்புற பிரதேசத்தின் வாயுத் தராதர நிலை முகாமைத்துவம் தொடர்பான தரவுகளின் அடிப்படையில் உபாய வழி மற்றும் கொள்கை விருத்தியின் கொள் திறன் விருத்தி தொடர்பான தரவுகளின் அடிப்படையில் உபாய வழி மற்றும் கொள்கை விருத்தி தொடர்பாகக் கொள் திறன் விருத்திக் கருத்திட்டம் முன் மொழியப்பட்டது. கருட்த்திட்டத்தை முன்னெடுக்கும் பொருட்டு முத்தரப்பு ஒப்பந்தமொன்று சுற்றாடல் அமைச்சில் 2023 மார்ச் மாதம் 30 ஆந் திகதி கைச்சாடிடப்பட்டது.

தற்சமயம் பிரதான பங்குதார நிறுவனமான வெளி நாட்டு வளங்கள் திணைக்களம், போக்குவரத்து அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களுடன் கருத்திட்டத்தின் ஆரம்பக் கூட்டங்கள் நடாத்தப்படுதல் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினதும், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் தன்னியக்க, நடப்பு மற்றும் பயன் பெறாத, பயனற்ற வாயுத் தராதர மேற்பார்வைப் பணிகளின் தரவுப் பகுப்பாய்வு மற்றும் பின்னாராய்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



அவ்வாறே, செயன் முறை மற்றும் நுண் தூண்டல் மிகு நிலைகளின் செயற்பாடுகளின் மதிப்பீடு (passive tubes and microsensors) மற்றும் வாயு உமிழ்வு பண்டப் பட்டியல் தொடர்பாக அமைச்சு மற்றும் தொடர்புடைய தரவு வழங்குநர்களுடன் கூட்டத் தொடர்களை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டுள்ளன.

2.1.5 சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரம்

பசுமை இராச்சிய பெறுகை நிகழ்ச்சித் திட்டம்

சுற்றாடல் அமைச்சு, நிதி அமைச்சு தேசிய பெருகை ஆணைக் குழு உள்ளடங்களாகப் பிரதான பங்குதாரர்களுடன் கூட்டிணைந்து பசுமை பெருகை தொடர்பான தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டதுடன், அக் கொள்கையை செயற்படுத்தும் பொருட்டு 2023.07.24 ஆந் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ரீர்மன் அபிவிருத்தி கூட்டிணைப்புடன் (Deutsche Gesellschaft für International Zusammenarbeit (GIZ) ஒன்றிணைந்து சுற்றாடல் அமைச்சு இதனை செயற்படுத்தும் பணி களை ஆரம்பித்துள்ளது. அரச பிரிவு மற்றும் சந்தை ஆயத்தம் தொடர்பான ஆராய்ச்சிக் கோட்பாடு முன் வைக்கப்பட்டிருப்பதுடன், இவ் ஆராய்ச்சிப் பணிகளை 2024 ஆம் ஆண்டு கால கட்டத்தில் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய சுற்றாடல் அடையாளமிடல் தொடர்பான தேசி ய சட்டகத்தை செயற்படுத்துதல்

பசுமை அடையாளமிடுகை மற்றும் சான்றுபடுத்துகை தொடர்பான செயன் முறையின் பன் முகத் தன்மை மற்றும் பசுமை சுத்தப்படுத்துகை (Green washing) தொடர்பாகக் கருத்திலெடுத்து இலங்கை தராதர அங்கீகார சபை மற்றும் இலங்கை கட்டளைகள் நி றுவனம் உட்பட பிரதான பங்குதாரர்களின் பங்கேற்புடன் சுற்றாடல் அமைச்சினால் இலங்கையின் பசுமை அடையாளமிடுகை தொடர்பான தேசிய சட்டகம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத் தேசிய சட்டகம் 2022.11.21 ஆந் திகதி அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டிருப்பதுடன், சுற்றாடல் அமைச்சு ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டிணைப்பு நி றுவனத்துடன் (GIZ) கூட்டிணைந்து 2023 ஆம் ஆண்டில் அச் சட்டகத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கென தேசிய செயற்படுத்துகைக் குழு (NSC) மற்றும் பல் தரப்பு தொழில்நுட்பக் குழு (MSTC) நிலை நாட்டப்பட்டது

பசுமை உற்பத்தி மற்றும் பசுமைத் தொழில் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடலாவிய ரீதியாகக் காணப்படுகின்ற பசுமை நற்புள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் பசுமைத் தொழில் முனைவர்கள் தொடர்பான தகவல்கள் எமது அமைச்சுடன் கூட்டிணைந்த பி ரதேசச் செயலகங்களில் பணியாற்றுகின்ற சுற்றாடல் உத்தியோகத்தர்களின் ஊடாக ஒன்று திரட்டும் பொருட்டு அறிவூட்டுகை நிகழ்ச்சிகளும், கொள் தி றன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சிகளும் 2022 மற்றும் 2023 ஆகிய வருட கால கட்டத்தில் முழு நாடும் உள்ள்டங்கக் கூடிய வகையில் நடாத்தப்பட்டது. சுற்றாடல் நேயமிக்க உற்பத்திகளை விருத்தி செய்யும் பொருட்டு SLYCAN Trust சர்வதேச இயக்கத்துடன் கூட்டிணைந்து சுற்றாடல் நற்புள்ள் உற்பத்திகளின் உற்பத்தியாளர்களின் நிகழ் நிலைத் தகவல் ஆவணமொன்றைத் தயாரிக்கும் பொருட்டு நவம்பர் மாதம் 01 ஆந் திகதி கைச்சாடிடப்பட்டது.



நாடலாவிய ரீதியாக கிராமத்துக்குக் கிராமம் சூழல் நேயமிக்க உற்பத்திகளை அடையாளம் கண்ட வண்ணம் அவர்களது தொழிற் துறையை விருத்தி செய்யும் பொருட்டு தேவையான உதவிகளை வழங்கும் நோக்கில் அறிவூட்டுகை மற்றும் தரவுகளை ஒன்று சேர்க்கும் பணிப் பட்டறைத் தொடரொன்று அனுராதபுரி மாவட்டத்தின் மத்திய நுவரகம் பிரதேசச் செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் இரண்டாவது பணிப் பட்டறை 2023 டிசம்பர் மாதம் 22 ஆந் திகதி திருகோணமலை மாவட்டத்தின் சூழல் நேயமிக்க உற்பத்தியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கென வெற்றிகரமாகத் தி ருகோணமலை நகர சபை கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

ESAs முன்னோடித் திட்ட வரையறை தொடர்பாகத் தகவல் ஆவணமொன்று தயாரி க்கப்பட்டது.

சூழல் தூண்டல் மிக்க பிரதேசங்களில் (ESA) உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் சூழல் தொகுதிச் சேவை பராமரிப்புகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் தி ட்டங்கள் இதன் கீழ் நடாத்தும் பொருட்டு விலங்கினப் பகுப்பாய்வின் அடிப்படையில் சூழல் தூண்டல் மிக்க 102 பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னெடுக்கப்பட்டதுடன், இலங்கையில் பல்வேறு உயிர்ப் பல்வகைமை காலநிலை வலயங்கள் பிரதி நிதி த்துவப்படுத்தும் 12 கல வலையமைப்புத் தொகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. மல்வது ஒய பள்ளத்தாக்கை சுட்டிக் காட்டிய வண்ணம் சூழல் தூண்டல் மிக்க எட்டு பிரதேசங்கல் அடையாளம் காணப்பட்டு, நில மட்டத்தின் கீழ் செயற்படுத்தும் பொருட்டு கிராம சேவகர் பிரிவு (GNDs) ரீதியான தொகுதிகளாக அவற்றை ESAs முன்னோடித் திட்ட வரையறை தொடர்பாகத் தகவல் ஆவணமொன்று தயாரி க்கப்பட்டது.

பரிS உடன்படிக்கையின் 6 ஆவது பிரிவை நாட்டினுள் செயற்படுத்துதல்

ஒருங்கிணைந்த காபன் வைப்பிலிடுகைப் பொறிமுறை

2022 ஒக்டோபர் 10 ஆந் திகதி ƒப்பான் மற்றும் இலங்கைக்கிடையில் "குறைக் காபன் விருத்தி கூட்டிணைப்பு தொடர்பான ஒருங்கிணைந்த காபன் வைப்பிலிடுகைப் பொறிமுறை" தொடர்பான ஒப்பந்தம் கைச்சாடிடப்பட்டது. இன்றளவில் அமைச்சரவையின் அனுமதியுடன் ஒருங்கிணைந்து காபன் வைப்பிலிடுகைப் பொறிமுறை (JCM) தொடர்பான ஒருங்கிணைந்த குழு நிலை நாட்டப்பட்டுள்ளது. JCM செயன்முறை தொடர்பாக அறிவூட்டும் பொருட்டு கருத்திட்ட முன் மொழிவாளர்களுடன் ஒரு சில பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டன.

பரிS உடன்படிக்கையின் 6 ஆவது பிரிவின் கீழ் கூட்டிணைப்பு தொடர்பாக இலங்கை மற்றும் சிங்கப்பூர் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) 2023 ஆகS்ட் 22 ஆந் திகதி இலங்கை மற்றும் சிங்கப்பூர் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாடிடப்பட்டது. UNDP மற்றும் GGGI உடன் கூட்டிணைந்து பரிS உடன்படிக்கையின் 6 ஆவது பிரிவின் கீழ் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு உதவியை பெற்றுக் கொள்வதற்கு சிங்கப்பூர் அரசிடமிடுந்து இணக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டது.



இலங்கையின் காபன் வணிக சட்டகத்தைத் தயாரித்தல்

இதற்கென காபன் வணிக சட்டகத்தைத் தயாரிக்கும் பொருட்டு நிபுணர் குழுவொன்று நிலை நாட்டப்பட்டதுடன், UNDP நிதி வசதிகளுடன் கூடியதாக இரண்டு நிபுணர் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அவ்வாறே தேசிய காபன் வணிக சட்டகம் வரைவு படுத்தப்பட்டுள்ளது.

2.1.6 சூழல் மாசாகக் கட்டுப்பாடு மற்றும் இரசாயனப் பதார்த்த

பசுமை பல்கலைக்கழக நிகழ்ச்சித் திட்டம் 2023

பசுமை பல்கலைக்கழகக் கோட்பாடு தொடர்பான அரச மற்றும் தனியார்ப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் போதனாசிரியர்களை அறிவூட்டும் நோக்கில் நிகழ்ச்சித் திட்டமொன்று 2023 ஒக்டோபர் மாதம் 30 ஆந் திகதி சுற்றாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

"பசுமைப் பாடசாலை" கோட்பாடு தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்

இதன் கீழ் கொழும்பு ஆனந்தா கல்லூரி "பசுமைப் பாடசாலை" எனும் திட்டத்தை விருத்தி செய்வதற்குத் திட்டமிட்டிருப்பதுடன், இதனை முன்னோடிக் கருத்திட்டமொன்றாக செயற்படுத்துவதற்கும், நகர்ப்புற பாடசாலைகளின் பசுமைக் கோட்பாட்டை விருத்தி செய்வதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், 2023 .01.03 ஆந் திகதி அதன் பசுமைப் பாடசாலைக் கோட்பாடு தொடர்பாகப் பூரண அறிவூட்டல், காபன் பாதச் சுவடிகள் மற்றும் நீர் சுவடிகள் தொடர்பாகவும், இக் கோட்பாடு தொடர்பாகவும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பங்களிப்பு தொடர்பாக உறையொன்று நடாத்தப்பட்டது.

இலங்கைப் பாராளுமன்றத்துக்கு அண்மித்ததாக ஓடுகின்ற தியவன்னா ஓயவின் நீர் மாசாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும், அதன் தராதர நிலையை மேலுயர்த்தும் பொருட்டும் முன்னெடுக்கப்படுகின்ற கருத்திட்டம்

இலங்கைப் பாராளுமன்றத்தை அண்டியதாக ஓடுகின்ற தியவன்னா ஓயவின் நீர் மாசாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், அதன் தராதர நிலையை மேலுயர்த்தும் நோக்கிலும் முன்னெடுக்கப்படுகின்ற கருத்திட்டத்தின் செயலாற்றுகை ஆளணியின் அவைக் கூட்டமொன்று 2023 .03.14 ஆந் திகதி நடாத்தப்பட்டதுடன், அதன் போது மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மற்றும் நீர் வளங்கள் சபை ஆகிய நிறுவனங்களினால் இக் கருத்திட்டத்தின் விருத்தி தொடர்பாக அறிக்கையிடப்பட்டது

இலங்கையில் பிளாSரிக் பதார்த்தங்களை சீராக முகாமைத்துவப்படுத்தாது பயன்படுத்துதல் மற்றும் வெளியகற்றுவதால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் தொடர்பாக சுற்றாடல் அமைச்சினால் செயன் முறை நடவடிக்கையாக பிளாSரிக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாகப் பொது மக்களின் பழக்க வழக்கங்களை மாற்றும் நோக்கில் அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குத் தொடர்பாடல் உபகரணங்கள் தயாரிக்கப்பட்டன.

உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் தெற்காசிய சூழல் இணக்கப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் (SACEP) PLEASE கருத்திட்டத்தின் அனுசரணையுடன், இத் தொடர்பாடல் உபகரணங்கள் பயன்பாட்டுக்கென வெளி யிடுவதற்கு அமைச்சினால் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத் தொடர்பாடல் உபகரணங்களை ஊடகங்களுக்கு உத்தி யோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு 2023 நவம்பர் 7 ஆந் திகதி இடம் பெற்றது.

மினமாட்டா இணக்கப்பாட்டின் பங்குதாரர்களினது ஐந்தாவது கூட்டத் தொடர் (Minamata COP - 5)

மினமாட்டா கூட்டிணைப்பின் பங்குதாரர்களின் ஐந்தாவது கூட்டத் தொடர் 2023 ஒக்டோபர் 30 ஆந் தி கதியிலிருந்து நவம்பர் 3 ஆந் திகதி வரை ச்விட்சர்லாந்தி ன் ஜினீவா நகரில் நடைபெற்றது.



இக் கூட்டத் தொடரின் பிற்பாடு இரண்டு உப நிகழ்ச்சி த்திட்டங்கள் (Side Event) சுற்றாடல் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், சுற்றாடல் அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட இலங்கையின் சிறு அளவிலான தங்காபரண உற்பத்திப் பிரிவில் இரசப் பயன்பாடு தொடர்பாக ஆராய்வின் பி ற்பாடான கண்டறிவின் பிரகாரம், 2023 ஒக்டோபர் 13 ஆந் திகதி நிகழ் நிலை வழியின் ஊடாக அந் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது. ஏனைய நிகழ்ச்சித் திட்டம் இரசம் உள்ளடங்கிய "லோகனாத இரசம்" ஆயுர்வேத ஒளடதம் இறைப்பைப் புற்று நோய் தொடர்பாகப் பயன்படுத்துதல் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளின் கண்டறிவுகளின் பிரகாரம் 2023 நவம்பர் 02 ஆந் திகதி நடாத்தப்பட்டது.

2.1.7 இயற்கை வளங்கள் பாதுகாப்பு

பேண்தகு நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான முதலாவது தேசிய மா நாடு

2030 ஆந் ஆண்டளவில் இலங்கையின் நைதரசன் (N) வீண் விரயத்தைப் பாதிப் பெறுமானத்தினால் குறைக்கும் நோக்கில் சுற்றாடல் அமைச்சு பேராதனை பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்து ஆர்வம் காட்டும் தரப்பினரது பங்கேற்புடன் 2023 ஜூன் மாதம் 22 -23 ஆகிய திகதிகளில் தலவதுகொட Grand Monarch ஹோட்டல் வலாகத்தில் பேண்தகு நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான முதலாவது தேசிய மா நாட்டை ஒழுங்கு செய்திருந்தது. இதன் போது பேண்தகு நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான செயலாற்றுகைத் திட்டத்தை தயாரித்தல் தொடர்பான இடைச் செயற்பாட்டு பணிப் பட்டறையொன்று நடாத்தப்பட்டது.

அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்ற நலன் மிக்க நி லச் சுட்டி கருத்திட்டத்தின் மூலம் சர்வதேச பூகோல தி னம் தொடர்பாக அனுராதபுரம், குடாகனுமுல்ல ஆரம்பப் பள்ளியில் மர நடுகை நிகழ்ச்சியொன்று நடாத்தப்படுதல் மற்றும் திரப்பனை பிரதேச செயலகப் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில பாடசாலைகளி ன் அதிபர்கள், ஆசிரிய வழிகாட்டாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 100 பேருக்கு சுற்றாடலை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் அடுக்கடுக்கான குளத் தொகுதிகளை பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக அறிவூட்டும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

வரட்சியைத் தடுக்கும் தேசிய திட்டம் 2020 - மதிப்பீட்டு பணிப் பட்டறை

சுற்றாடல் அமைச்சு மற்றும் உலக உணவு மற்றும் வி வசாய இயக்கம் கூட்டிணைந்து ஒழுங்கு செய்த வரட்சி யை ஒழிக்கும் தேசிய திட்டம் 2020 ஐ மதிப்பீடு செய்யும் பணிப் பட்டறை நடாத்தப்பட்டது. இதன் போது வரட்சியை இல்லாதொழிக்கும் முகாமைத்துவம் தொடர்பாக ஒவ்வொரு நிறுவனங்களினதும் செயற்பாடுகளை இனங் காணுதல், வரட்சியை இல்லாதொழிக்கும் தேசிய திட்டம் தொடர்பாகப் பல்வேறு பங்குதார நிறுவனங்களினால் இன்றளவில் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் மற்றும் அவற்றை செயற்படுத்துகையில் முகங் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ள சவால்கள் தொடர்பாகக் கண்டறிதல் மற்றும் வரட்சி முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கொள்கை மற்றும் நிறுவன ரீதியான ஏற்பாடுகள் மற்றும் அவற்றின் விருத்தி தொடர்பாகக் கண்டறியும் செயற்பாடுகள் இதன் போது குறிப்பாக முன்னெடுக்கப்பட்டது.

ஆசிய பசுபிக் சுற்றாடல் அமைச்சர்களின் 05 ஆவது மா நாடு மற்றும் சமாந்தரமாக நடாத்தப்பட்ட பேண்தகு நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான நிகழ்ச்சித் தி ட்டம்

2023.10.03 ஆந் திகதியிலிருந்து 06 ஆந் திகதி வரை கொழும்பில் நடந்தேரிய ஆசிய - பசுபிக் சுற்றாடல் அமைச்சர்களின் 05 ஆவது மா நாட்டின் போது பேண்தகு நைதரசன் முகாமைத்துவம் தொடர்பாக நி கழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக தெற்காசிய கூட்டிணைப்பு சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் தி ருமதி ரொகியா காதூன் அவர்கள் மற்றும் பேராசிரியர் Mark Sutton உட்பட உள் நாட்டு மற்றும் வெளி நாட்டு ரீதியாக நைதரசன் முகாமைத்துவம் தொடர்பாக செயற்படுகின்ற பல நிபுணர்கள் பங்கேற்றனர். இதன் போது, பல்வேறு நாடுகள் பேண்தகு நைதரசன் முகாமைத்துவம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் எதிர்வரும் திட்டங்கள் தொடர்பான முன் வைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.



2.1.8 சுற்றாடல் கல்வி மற்றும் அறி வூட்டுகை



மரக் கன்று நடுகை நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தல்

பொது நலவாய நாடுகளின் செயலாளர் அலுவலகத்தி ன் தலைவர் திருமதி பெட்ரீஷியா ஸ்கொட்லண்ட் அவர்களினதும், ஐக்கிய நாடுகளின் முன்னைய செயலாளர் திரு பேன் கீ மூன் அவர்களினதும் இலங்கைக்கான பயணத்தை நினைவு கூர்ந்த வண்ணம் சொபாதம் பியச வலாகத்தில் குறைப் பயன்பாட்டு பழ மரங்களை நடும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக அமைச்சினால் நினைவுப் பரிசும் கையளிக்கப்பட்டது.

பசுமை தொழில் முனைவர்களை விருத்தி செய்வதன் ஊடாக சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 650 நாற்றங்கால்களை உறுவாக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான பலனாளிகளுக்கு மாவட்டச் செயலாளர்களினால் மாவட்டத்தின் தேவையின் பிரகாரம் நாற்றங்கால்களை உறுவாக்கும் பொருட்டு பிரதேச செயலாளர்களின் ஊடாக குறை வடுமானமீட்டும் குடும்பங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு அவை கையளி க்கப்பட்டதுடன், ஒரு நாற்றங்கால் தொடர்பாக ரூபா மூன்று இலட்சம் பணத் தொகை கையளிக்கப்பட்டது. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாற்றங்கால் நடுனர்களுக்குத் தேவையான பயிற்சிகள் சுற்றாடல் அமைச்சினால் தொடர்புடைய பிற நிறுவனங்களுடன் கூட்டிணைந்து கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் கீழ் இன்றளவிலும் பலனடைந்த தொழில் முனைவர்களின் எண்ணிக்கை 336 ஆகக் காணப்படுகின்றது.

உயிர்ப் பல்வகைமை தொடர்பான அறிவூட்டுகை

வட மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் உதவி யுடன் கூடியதாக உயிர்ப் பல்வகைமை மற்றும் அதனைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக அபாய நிலைக்கு உள்ளாகியுள்ள விலங்கினங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக அறிவூட்டும் பயிற்சிப் பட்டறையொன்று நடாத்தப்பட்டதுடன், அதற்கென அனுராதபுரி மாவட்டத்தின் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுமாக மொத்தமாக 221 பேர் பங்கேற்றனர்.

தேசிய ரூபவாஹினி அலை வரிசையின் ஊடாக ஒளி பரப்பப்படுகின்ற "ஆயுபோவன்" நிகழ்ச்சியின் கீழ் கண்டல் தாவரப் பாதுகாப்பு மற்றும் பேண்தகு பயன்பாடு தொடர்பாக 2 மணித்தியால நேரலை பேச்சு வார்த்தை சுற்றாடல் அமைச்சின் செயலாளர், வன பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகள், நி புணர்கள் மற்றும் தனியார்ப் பிரிவின் பிரதி நிதிகளின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது. .

கண்டல் தாவரம் தொடர்பாக அறிவூட்டுகை மற்றும் மர நடுகை

சுற்றாடல் அமைச்சின் தொழில்நுட்பப் பங்கேற்புடனும், டில்மா நிறுவனத்தின் ஏற்பாட்டின் கீழ் இலங்கை கடற் படையினால் கண்டல் தாவரத் தொகுதி பாதுகாப்பின் முக்கியத்துவம் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சியுடன் கூடியதாகக் கண்டல் தாவர நடுகை நிகழ்ச்சியொன்று 2023 fலை மாதம் 14 ஆந் திகதி கல்பிட்டியவில் நடாத்தப்பட்டது.

கண்டல் தாவர நடுகை மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சி யொன்று கொக்கல களப்பை அண்மித்த தலாதுடுவ ஆரன்ய சேனாசன வலாகத்தில் நடாத்தப்பட்டது. இதற்குத் தேவையான கண்டல் மரக் கன்றுகள் மற்றும் ஒழுங்குபடுத்துகை உதவிகளை வன சீவராசிகள் மற்றும் கடற் சார் வளங்கள் பாதுகாப்பு இயக்கத்தினால் வழங்கப்பட்டதுடன், இதற்கென 75 பாடசாலை மாணவர்கள் மற்றும் 25 வெளி நாட்டவர்கள் தன்னி ச்சையாகப் பங்கேற்றிருந்தனர்.

உயிர்ப் பல்வகைமையுடன் கூட்டிணைந்த பாரம்பரிய அறிவியல் தொடர்பாக அறிவூட்டல் நிகழ்ச்சி

இலங்கையின் உயிர்ப் பல்வகைமையுடன் கூட்டிணைந்த பாரம்பரிய அறிவைப் பாதுகாத்த வண்ணம் அவற்றை பேண்தகு வகையில் பயன்படுத்துதல் தொடர்பாக ஏனைய பங்குதார நி றுவனங்கள் மற்றும் பொது மக்களை அறிவூட்டும் பயி ற்சிப் பட்டறையொன்று 2023.12.21 ஆந் திகதி சுற்றாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் டிரீட்டல் வி ற்பனை தொடர்பாக இளைஞர்களை இலக்கிட்ட ஊடக பணிப் பட்டறையொன்று 2023 மார்ச் 17 மற்றும் 18 ஆந் திகதிகளில் அனுராதபுரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர் குழுவொன்றுக்கு நடாத்தப்பட்டது.

கிராமிய ரீதியாக அறிவூட்டல் மற்றும் பாதுகாப்புத் தி ட்டத்தை தயாரித்தல்

மாதிரி நிலச் சுட்டி குடிகளை பாதுகாக்கும் நி புணர்களை கிராமிய ரீதியாக அற\வூட்டுதல் மற்றும் பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரித்தல், கிராமிய ரீதி யாகக் குழுக்களை நிலை நாட்டுதல், பங்குதாரர்களை அடையாளம் காணுதல் மற்றும் அரச நி றுவனங்களுடன் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் செயற்பாடும் இதன் போது முன்னெடுக்கப்படும்.

சூழல் தூண்டல் மிக்கப் பிரதேசங்கள் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் பணிப் பட்டறை

சூழல் தூண்டல் மிக்க பிரதேசங்கள் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக அரச உத்தி யோகத்தர்களை அறிவூட்டும் இரண்டு நாள் பணிப் பட்டறையொன்று 2023.12.18 மற்றும் 19 ஆகிய தி கதிகளில் மன்னார் பிரதேசத்தில் நடாத்தப்பட்டது.

வாயுத் தராதர முகாமைத்துவம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம்

நீள வானம் மற்றும் சுத்தமான வாயு சர்வதேச தி னத்தைக் கொண்டாடும் நிகழ்ச்சிக்குச் சமாந்தரமாக மாத்தரை, குருணாகலை, கம்பஹா மற்றும் கண்டி ஆகி ய மாவட்டங்களில் நிகழ் நிலை செயன் முறையின் ஊ டாக புகைப் பரீட்சிப்பு நிகழ்ச்சி நடாத்தப்பட்டதன் வாயி லாகத் தரமுயர்ந்த வாயுயின் முக்கியத்துவம் தொடர்பாக அறிவூட்டல் செயற்பாடு நடாத்தப்பட்டது. அவ்வாறே, வாயு மாசாக்கத்தைக் குறைப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் அறிவூட்டல் நிகழ்ச்சி நிரலொன்று நடாத்தப்பட்டது.



மொன்ரியல் கூட்டிணைப்பின் நிதிப் பங்களிப்புடன் கூடியதாக வாயு மாசாக்கிகளின் கட்டுப்படுத்துகை மற்றும் ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் தலைப்பின் கீழ் சீ. எம். எ. மஹா வித்தியாலயம் - கோட்டே, ஹெலேனா விஜேவர்தன வித்தியாலயம் - களனிய மற்றும் விஹார மஹா தேவி மகளிர் கல்லூரி - கிரி பத்கொட ஆகிய பாடசாலைகளில் 120 பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்ட நிரலொன்று நடாத்தப்பட்டது.

குளிரூட்டி மற்றும் வளிப் பதனாக்கித் துறையின் நன்னெரி மற்றும் தீப்பற்றக் கூடிய குளிரூட்டல் பதார்த்தங்கள் மற்றும் அவை உள்ளடங்கிய உபகரணங்களைப் பயன்படுத்துதல் தொடர்பாக ஒரு நாள் மற்றும் மூண்டு நாள் கொண்ட 17 பயிற்சிப் பணி ப் பட்டறைகள் தொழில்நுட்ப நிபுணர்களுக்கென நடாத்தப்பட்டது.

வணிகத் துறை சார் குளிரூட்டல் தொகுதிகள் மற்றும் நடுத்தர அளவிலான வளிப் பதனாக்கிகள் தொடர்பான நன்னெரி மிக்க சேவைகள் மற்றும் தீப்பற்றக் கூடிய குளிரூட்டல் பதார்த்தங்களைக் கையாளுதல் தொடர்பாகக் கொள் திறனைக் கட்டியெழுப்பும் ஒரு நாள் மற்றும் மூன்று நாள் கொண்ட 10 பணிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

குளிரூட்டல் பதார்த்த மீள் சுழற்சி நிலையங்களை மேம்படுத்துதல் தொடர்பாக 03 பணிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

தீப்பற்றக் கூடிய குளிரூட்டல் பதார்த்தங்களைக் கையாளுதல் தொடர்பாகவும், குளிரூட்டல் துறையின் நன்னெறி மிக்க பழக்க வழக்கங்கள் தொடர்பாகவும், கி காலி திருத்தத்தை அறிமுகப்படுத்தும் நோக்கிலும் 03 பணிப் பட்டறைகள் முதலீட்டு விருத்தி வலயங்களின் தொழில் வல்லுனர்களுக்கென நடாத்தப்பட்டன.

மேலும், முதலீட்டு விருத்தி சபையின் வலயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கென மொன்ரியல் கூட்டிணைப்பின் செயற்படு தன்மை மற்றும் தேசிய பணிப் பொறுப்பு மற்றும் கிகாலி திருத்தத்தை செயற்படுத்துகையில் எதிர்வரும் கால கட்டத்தில்

அதிகாரம் பெறும் கொள்கைகள் மற்றும் சட்ட தி ட்டங்களை அறிமுகப்படுத்தும் தொழில்நுட்ப மாறுபாடுகள் தொடர்பாக அறிவூட்டும் பொருட்டு 2 பணிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன

குளிரூட்டி மற்றும் வளிப் பதனாக்கி இயந்தி ரங்களைப் பயன்படுத்தும் இறுதிப் பலனாளிகளது நன்னெரி மிக்க பயன்படுத்துகை மற்றும் மகளிரை வலுவூட்டும் பொருட்டு, அரச பணியாட்களுக்கென 09 பணிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

தேசிய ஓசோன் அலகினால் ஓசோன் பயிற்றுவி ப்பாளர்களுக்குப் பயிற்றுவித்த மத்திய சுற்றாடல் அதி கார சபையின் ஒரு தரப்பினரின் ஊடாக நாடு பூராகவும் பொது மக்கள், பாடசாலை சிறுவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்களை அறி வூட்டும் பொருட்டு 15 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஓசோன் படலத்தைப் பாதுகாத்தல் தொடர்பாக கலுஅக்கல, ராƒகிரிய, களனிய, கிரிபத்கொட மற்றும் நெலிகம ஆகிய பிரதேசங்களின் பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் பொருட்டு நிகழ்ச்சித் தி ட்டங்கள் நடாத்தப்பட்டன

சீரற்ற குளிரூட்டல் மற்றும் வளிப் பதனாக்கி மற்றும் நடப்பு வளிப் பதனாக்கித் துறை சார் பணிகளில் ஈடுபட்டுள்ள 100 கைத்தொழில் நிபுணர்களுக்கு அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

HFC இறக்குமதியாளர்களின் சுங்க மதிப்பீட்டுப் பிரதி நிதிகளுக்கு (Customs House agents) தொடர்புடைய அறிவூட்டுகை நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டதுடன், இலங்கை சுங்கத்தின் அதிகாரி களைப் பயிற்சியாளர்களாகப் பயிற்றுவிக்கும் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி கோட்டா செயன் முறை செயற்படுத்தப்படுதல் தொடர்பாக இறக்குமதியாளர்களை அறிவூட்டும் பணிப் பட்டறையொன்று நடாத்தப்பட்டது.

சாரணர் இயக்கம் மற்றும் தேசிய ஓசோன் அலகு கூட்டிணைந்து மிதுரோ (Ozone Friends) நிகழ்ச்சி யின் விடயப் பரப்பை விருத்தி செய்தல் தொடர்பான இரண்டாவது பணிப் பட்டறை ƒனவரி மாதத்தில் நடாத்தப்பட்டது. 100 சாரணர்களுக்கு ஓசோன் மி துரோ நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் பொருட்டு 'Earth Easy Ozone Freinds' முகாம் ƒஒன் மாதமளவில் நடாத்தப்பட்டது.

2.1.9 சர்வதேச சூழல் கூட்டிணைப்பு

இரு தரப்பு மற்றும் பல் தரப்பு கூட்டிணைப்புகள்

2023 பெப்ரவரி மாதம் 07 ஆந் திகதி இலங்கை மற்றும் உலகலாவிய பசுமை விருத்தி நிறுவனத்துடன் (GGGI) கூட்டிணைந்து பங்குதார இராச்சிய ஒப்பந்தங்களில் கைச்சாடிடும் செயற்பாடும், அந் நிறுவனத்தின் தலைவர் திரு பேன் கீ மூன் அவர்களது இலங்கைக்கான பயணம் மேற்கொள்ளப்பட்டது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பான செயற்பாடுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன

- இலங்கை மற்றும் சிங்கப்பூர் அரசுகளிடையேயான காபன் கடன் கூட்டிணைப்பு தொடர்பான புரி ந்துணர்வு ஒப்பந்தம்
- இலங்கை மற்றும் கொரிய அரசுகளிடையேயான காலநிலை மாற்ற்றங்கள் தொடர்பான கூட்டிணைப்பு ஒப்பந்தம்
- இலங்கை மற்றும் மாலைத் தீவிடையேயான சுற்றாடல், காலநிலை மற்றும் தொழில்நுட்ப மாற்றீடு தொடர்பான இரு தரப்பு ஒப்பந்தம்
- கொலம்பிய அரசு மற்றும் இலங்கை அரசி டையேயான தொழில்நுட்ப இணக்கப்பாடு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்
- கிர்கீŠ குடியரசு மற்றும் இலங்கை அரசி டையேயான சுற்றாடல் துறை சார் ஒப்பந்தம்
- இலங்கை அரசு மற்றும் ரஷ்யாவுக்கிடையில் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான அணுச் சக்தி பயன்பாடு தொடர்பான ஒப்பந்தம்
- இலங்கை மற்றும் ருவண்டா அரசுகளிடையேயான கனிய வளங்கள் துறை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்
- இலங்கை மற்றும் சீனாவுக்கிடையேயான பசுமை வி ருத்தி தொடர்பான முதலீட்டு விருத்தி கூட்டிணைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்



இலங்கை அரசு மற்றும் உலகலாவிய பசுமை விருத்தி நி றுவனத்துக்கும் (GGGI) இடையேயான கூட்டிணைப்பு

- ரீப்பான் மற்றும் இலங்கையிடையேயான குறைக் காபன் விருத்தி கூட்டிணைப்பு தொடர்பான ஒருங்கிணைந்த வைப்பிலிடுகைப் பொறிமுறை தொடர்பான இரு தரப்பு கூட்டிணைப்பு

2023 பெப்ரவரி 3 ஆந் திகதி பொது நலவாய நாடுகளின் செயலாளர் திருமதி பெட்ரீஷியா ஸ்கொட்லண்ட் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பயணம்



6 ஆவது பொது நலவாய நாடுகளின் செயலாளரின் இலங்கைக்கான விரீயம்

ஆசிய பசுபிக் நாடுகளின் சுற்றாடல் அமைச்சர்களினதும், சுற்றாடல் அதிகாரிகளினதும் ஐந்தாவது மா நாடு

ஆசிய பசுபிக் நாடுகளின் சுற்றாடல் அமைச்சர்களினதும், சுற்றாடல் அதிகாரிகளினதும் ஐந்தாவது மா நாடு 2023 ஒக்டோபர் 03 ஆந் திகதியிலிருந்து 2023 ஒக்டோபர் 05 ஆந் திகதி வரை கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்றது. இதற்கென 39 நாடுகள் பங்கேற்றதுடன், நிகழ் நிலை வழி முறையின் ஊடாகவும் பங்கேற்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.



அதன் பிரகாரம், ஆசிய பசுபிக் தலைமைக் குழுக்கள் மற்றும் பங்குதாரர்களினது மா நாடு, சூழல் தொடர்பான விஞ்ஞான, கொள்கைகள் மற்றும் வணிக மா நாடுகள், முது நிலை உத்தியோகத்தர்களின் கூட்டிணைப்பு, சிறு நிகழ்ச்சித் திட்டங்கள், இரு தரப்பு பேச்சு வார்த்தைகள் ஆகியன அவ்விடங்களில் நடாத்தப்பட்டதுடன், 2023 ஒக்டோபர் 06 ஆந் திகதி திடல் சார் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கென பல்வேறு நிறுவனங்களினதும், அமைச்சுக்களின் உத்தியோகத்தர்களும் பங்கேற்றனர்.

2.1.10 சுற்றாடல் தினக் கொண்டாட்டம்

உலக கடல் புற் தினக் கொண்டாட்டம்

(2023 மார்ச் 01)

2022 மே 23 ஆந் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அவைக் கூட்டத்தின் 74 ஆவது மா நாட்டின் போது மார்ச் மாதம் 1 ஆந் திகதி லஉக கடல் புற் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக, சுற்றாடல் அமைச்சு, வெளி நாட்டலுவல்கள் அமைச்சு, வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள, புலூ ரிசோசஸ் டிரஸ்ட் மற்றும் ஏனைய தொடர்புடைய பங்குதார நிறுவனங்களுடன் கூட்டிணைந்து 2023 மார்ச் 1 ஆந் திகதி முதலாவது உலக கடல் புற் தினக் கொண்டாட்டம் தொடர்பான தேசிய விழா ஒழுங்கு செய்யப்பட்டது. இத் தேசிய விழாவின் போது இது தொடர்பாக விசேட நினைவு முத்திரை, நினைவுக் கடித உரையொன்று வெளியிடப்பட்டது.



சர்வதேச பூகோள தினக் கொண்டாட்டம்

(2023 ஏப்ரல் 22)

இம் முறை சர்வதேச பூகோள தினத் தலைப்பாக "Invest in Our Planet" (பூகோளத்தில் முதலீடு செய்வோம்) காணப்பட்டது. இதற்குச் சார்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது. இதன் போது பூகோள தினத்தின் முக்கியத்துவம் மற்றும் இயற்கை வளங்களை எதிர்க்கால சந்ததியினருக்குப் பாதுகாத்தல் தொடர்பாக அறிவூட்டும் சொற் பொழிவு நடாத்தப்பட்டது.

சர்வதேச உயிர்ப் பல்வகைமை தினக் கொண்டாட்டம்

(2023 மே 22)

இம் முறை சர்வதேச உயிர்ப் பல்வகைமை தினக் கொண்டாட்டத்தின் தலைப்பாக " உயிர்ப் பல்வகைமையை மீள் நிலைப்படுத்தல் : ஒப்பந்தத்தின் கீழ் செயற்படுத்துதல்" காணப்பட்டது.

இத் தினத்துக்கு சமாந்தரமாக, இலங்கைக்கு தனித்துவம் மிக்க அழிவடையும் நிலையிலுள்ள நன்னீர் மீனினங்களான தம்பலயா (Labeo lankae) மீனினத்தின் 30,000 குஞ்சுகளை அவற்றின் இயற்கை வாழிடங்களான மல்வது ஓய பள்ளத்தாக்கு மற்றும் தும்பி குளம குளத்துக்கு விடுவிக்கப்பட்டது.

சர்வதேச சூழல் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டம்

(2023 ஜூன் 05)



2023 சர்வதேச சுற்றாடல் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சியானது சொபாதம் பியச வலாகத்தில் கௌரவ சுற்றாடல் அமைச்சரது தலைமையில் நடாத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் "பிளாஸ்ரிக்கினால் ஏற்படுகின்ற கழிவுகளை இல்லாதொழிப்போம்" எனும் தலைப்பின் கீழ் இந் நிகழ்ச்சியைக் கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் இதற்குச் சமாந்தரமாக 2023.05.30 ஆந் திகதியிலிருந்து 2023.06.05 ஆந் திகதி வரை சுற்றாடல் வாரமொன்று செயற்படுத்தப்பட்டது.

சர்வதேச பாலைவனமாக்கம் மற்றும் வரட்சியை இல்லாதொழிக்கும் தினக் கொண்டாட்டம்

(2023 ஜூன் 17)

இவ் வருடத்தின் சர்வதேச பாலைவனமாக்கத்தைத் தடுக்கும் நாளின் தலைப்பாக "Her Land, Her Rights" எனும் தொனிப் பொருள் பெயரிடப்பட்டிருப்பதுடன், அதன் பிரகாரம், சுற்றாடல் அமைச்சு பேண்தகு நில முகாமைத்துவம் மற்றும் அதற்கான மகளிரது பங்களிப்பு" எனும் தலைப்பின் கீழ் "லிய சவிய" எனும் மரபு ரீதியான உணவு மற்றும் கைத்தரிப் பண்டங்களின் கண்காட்சியும், அறிவூட்டுகை நிகழ்ச்சியும் அனுராதபுரி நகர சபை மைதானத்திலும், அதனை அண்டிய வலாகத்திலும் நடாத்தப்பட்டது.

கண்டல் சூழல் தொகுதிப் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச தினக் கொண்டாட்டம்

(2023 ஜூலை 26)

இம் முறை இத் தினக் கொண்டாட்டத்திற்கென மேல் மாகாண பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 200 பேருக்கு "எமது நிலைப்பாட்டை உறுதி செய்யும் முகமாக எதிர்க்கால சந்ததியினரை முறைப்படுத்துவோம்" எனும் தலைப்பின் கீழ் நடை முறை பணிப் பட்டறையொன்று அமைச்சின் வலாகத்தில் நடாத்தப்பட்டது. இதன் போது கண்டல் சூழல் தொகுதியின் முக்கியத்துவம், கண்டல் தாவர இனங்களை அடையாளம் காணுதல், அவற்றின் பரம்பல், அழிவடையும் அபாய நிலை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அறிவூட்டப்பட்டது.

நீள ஆகாயத்திற்கான சுத்தமான காற்று தொடர்பான நான்காவது சர்வதேச தினக் கொண்டாட்டம்

(2023 செப்டம்பர் 07)



தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக நான்காவது தடவையும் கொண்டாடப்பட்ட இத் தினத்தின் 2023 ஆம் ஆண்டின் தலைப்பு "சுத்தமான காற்றுக்கு ஒன்று திரள்வோம்" எனும் தொனிப் பொருள் காணப்பட்டது. இத் தினத்தை கொண்டாடும் பொருட்டு பத்தரமுல்ல வலாகத்தின் முன்னால் பாதையில் ஓடக் கூடிய வாகனங்களிலிருந்து எழுமாறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வாகனங்களின் இடஞ் சார் புகைப் பரீட்சிப்பு மற்றும் தரமுயர்ந்த வாயு உமிழ்வைப் பேணுவதன் முக்கியத்துவம் தொடர்பாக கைச் சுவடிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட வண்ணம் சாரதிகள் மற்றும் பயணிகளை அறிவூட்டும் செயற்பாடும், பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் தரமுயர்ந்த வாயுவின் முக்கியத்துவம் தொடர்பாக சுட்டிக் காட்டிய வண்ணம் பாதையின் இரு புறமும் காட்சிப்படுத்துவதற்கும், கைச் சுவடிகளைப் பகிர்ந்தளித்த வண்ணமும், பாதசாரிகளை அறிவூட்டிய வண்ணமும் ஊடகங்களில் பிரச்சாரம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் ஊடாகப் பொது மக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

உலகலாவிய ஓசோன் தினம்

(2023 செப்டம்பர் 16)

"ஓசோன் படையை மீள் திருத்துவோம், காலநிலை மாற்றங்களைக் குறைப்போம்" எனும் தலைப்பின் கீழ் ஓசோன் நாள் கொண்டாட்டம் சுற்றாடல் அமைச்சரது தலைமையிலும், சுற்றாடல் அமைச்சின் செயலாளரினதும், ஏனைய அழைப்பாளர்களினதும் பங்கேற்புடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மா நாட்டு மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டது.



இதன் போது, “Ozone photogralhy & art contest 2023”போட்டியின் வெற்றியாளர்களுக்குப் பரிசளிப்பு நி கழ்வு இடம் பெற்றது. ஓசோன் நாள் கொண்டாட்ட வி ழாவில் பங்கேற்றோருக்கு இல்லங்களில் நடக் கூடிய பழக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஓசோன் நாள் கொண்டாட்ட விழாவை அடிப்படையாகக் கொண்டு ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதுடன் தொடர்புடைய அறிவூட்டல் நிகழ்கு பொது மக்களுக்கென நடாத்தப்பட்டு, இது தொடர்பான செய்தி பொது மக்களிடையே வியாபிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுட, இதன் கீழ் கொசுவச் சட்டை மற்றும் சூழல் நேயமிக்க வகையில் பண்டங்களை கொண்டு செல்லக் கூடிய பைகளும் தயாரிக்கப்பட்டன.

சர்வதேச மலை நாட்டு தினக் கொண்டாட்டம்

(2023 டிசம்பர் 11)

இம் முறை சர்வதேச மலை நாட்டு தினத்தைக் கொண்டாடும் தேசிய நிகழ்ச்சி "மலை நாட்டு சுற்றுச் சூழல் தொகுதியை மீள் நிலை நாட்டுதல்" எனும் தலைப்பின் கீழ் 2023 டிசம்பர் 11 ஆந் திகதி அனுராதபுரி மாவட்டத்தின் உயிர்ப் பல்வகைமையி னாலும், தொல் பொருளியல் பெறுமதியையும் தன்னகத்தே கொண்ட சூழல் தூண்டல் மிக்க பி ரதேசமான மானேவ மலையை அண்டியதாக நடாத்தப்பட்டது. இதன் போது மலே நாட்டு சுற்றுலாத் துறைக் கருத்திட்டம் மற்றும் மானேவ கந்தவின் தொல் பொருளியல் மற்றும் உயிர்ப் பல் வகைமை முக்கி யத்துவம் தொடர்பாகத் தொடர்புடைய பங்குதார உத்தி யோகத்தர்கள் மற்றும் குடி மக்களை அறிவூட்டும் பொருட்டான நிகழ்ச்சியும், மானேவ மலை நிலப் பகுதி யில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசமொன்றில் பரம்பி யுள்ள வெளி நாட்டு ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றி உள் நாட்டுத் தாவர இனங்களை நடுகையிடும் நடை முறை ரீதியான நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

2.1.11 நிறுவன ரீதியான செயற்பாடுகள்

பணி நிரந்தரமாக்கல்	
நாடலாவிய சேவைகள்	01
அரச முகாமைத்துவ சேவை	00
பதவியுயர்வு	
நாடலாவிய சேவைகள்	03
ஒருங்கிணைந்த சாரதிகள் சேவை	00
அலுவலக உதவியாளர் சேவை	04
அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை	00
ஓய்வு பெறுதல்	
அரச முகாமைத்துவ சேவை	02
ஒருங்கிணைந்த சாரதிகள் சேவை	01
திணைக்கள ரீதியான நிறைவேற்றுத் தரம்	01
பணியிலிருந்து சுயமாக விலகுதல்	
அபிவிருத்தி உத்தியோகத்தர்	17
பதவிகளை விட்டுச் செல்லல்	
அபிவிருத்தி உத்தியோகத்தர்	08
சாரதிகள் சேவை	00
கடன் வழங்குகை	
இடர்க் கடன்	98
உள் நாட்டு லீவு அரச . பொது . நிர். சுற்ற 14/2022	00
வெளி நாட்டு லீவு அரச . பொது . நிர். சுற்ற 14/2022	08
ஆளடையாள அட்டை தயாரிப்பு	40
பாராளுமன்றக் கேள்விகளுக்குப் பதி ல்களை முன் வைத்தல்	06
வருடாந்த அறிக்கைகள் மற்றும் செயலாற்றுக அறிக்கைகளை பாராளுமன்றத்துக்கு முன் வைத்தல்	04
நிவாரண அடிப்படையில் வாகன் இறக்குமதிப் பத்திரங்களை வெளியிடுதல்	30
அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்	32

2.1.12 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சு மற்றும் அதற்கு உரித்தான நிறுவனங்களின் உள்ளகக் கட்டுப்பாடை சீராக வலுவூட்டும் பொருட்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிலை நாட்டப்பட்டுள்ளது.

அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2023 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின் (திருத்தப்பட்ட) கீழ் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை உள்ளடங்களாக 21 கணக்காய்வு அறிக்கைகளை வெளியிடுவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், அனைத்து கணக்காய்வுத் துறைகளினதும் கணக்காய்வுச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டு கணக்காய்வு அறிக்கைகளை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன், கணக்காய்வுத் திட்டத்துக்குப் புறம்பாக 02 விசேட மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2.1.13 சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான பொது மக்களின் முறைப்பாடுகள், மேன் முறையீடுகள் மற்றும் ஊடக அறிக்கைகள் தொடர்பான ஆராய்ச்சி

அறிக்கையிடப்பட்ட காலப் பகுதியுடன் தொடர்புடையதாக சுற்றாடல் அமைச்சின் பல்வேறு பிரிவுகளுக்கும், அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு விசாரணை நடவடிக்கைகளுக்கென 212 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதுடன், அவற்றுள் 149 முறைப்பாடுகள் தொடர்பாக அறிக்கைகளைக் கோரும் பொருட்டு தொடர்புடைய தரப்பினருக்கு முன்வைக்கப்பட்டிருப்பதுடன், 68 பதில்கள் கிடைத்திருப்பதுடன், 17 விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

2.1.14 சட்ட ரீதியான செயற்பாடுகள்

செயற்பாடுகள்	விருத்தி
தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான மேன் முறையீடுகளை விசாரித்தல்	தீர்மானம் வழங்கப்பட்ட மேன் முறையீடுகள் -26
சுரங்க மற்றும் கனிய சட்டத்தின் கீழான மேன் முறையீடுகளை விசாரித்தல்	தீர்மானம் வழங்கப்பட்ட மேன் முறையீடுகள் -33
அமைச்சுடன் தொடர்புடைய வழக்குகள் / மனித உரிமை வழக்குகள் தொடர்பாக உதவி வழங்குதல்	வழக்குகள் எ 89
சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் தொடர்புடைய சட்ட வரைவு உறுவாக்கம் மற்றும் சட்ட மா அதிபரின் அனுமதியை பெற்றுக் கொள்ளும் பொருட்டு சட்ட ரீதியான ஆவணங்களை தயாரிப்பதற்கு உதவி வழங்குதல்	சட்டங்கள் / ஒழுங்கு விதிகள் - 05
அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான நிறுவனங்களுடன் தொடர்புடைய ஒப்பந்தங்களை தயாரித்தல் மற்றும் பரீட்சித்தல்	ஒப்பந்தங்கள் - 35
பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்	பொது மக்கள் முறைப்பாடுகள் -01

2.2 சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற கருத்திட்டங்களின் விருத்தி

2.2.1 குடி மக்களை அடிப்படையாகக் கொண்ட சுற்றாடல் தொகுதி பிரவேசிப்பின் ஊடாக வனாந்திரங்கள், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறையை ஒருங்கிணைந்ததாக முகாமைத்துவப்படுத்தும் கருத்திட்டம்.

கருத்திபங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளது. இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தின் கீழ் உயிர்ப் பல் வகைமை பாதுகாப்பு பிரதானமான கொள் தி றனாகவும், மல்வது ஒய படுக்கையின் கீழ் வெவ்வேறாக அமைந்துள்ள மூன்று பிரதேசங்களான, அதாவது இரண்டு மேட்டு நிலங்கள் (ரிட்டிகலவிலி ருந்து மிஹிந்தலை யோத வாவி / மடு வீதி - வி ல்பத்துவை) மற்றும் ஒரு கடலை அண்டிய வலயத்தில் (மன்னார் படுக்கை / வங்காலை - அரிப்பு - சிலாவதுர) காணிப் பயன்பாட்டைத் திட்டமிடும் பொருட்டு மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக அரசு மற்றும் பல் தரப்பு பிரதேச ரீதியான மற்றும் மாகாண ஆளுகைப் பி ரதேசங்கள் முழுதும் பரம்பிய சிவில் சமூகத்துடன் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படும். கருத்திட்டம் பி ன்வரும் உள்ளடக்கங்களை தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகின்றது.

வனப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதன் ஊடாக கிராமியப் பொருளாதாரத்தை விருத்தி செய்தல்

மன்னார் பிரதேசத்தின் வன பராமரிப்பு அலுவலகத்தி னால் வன பராமரிப்பு திணைக்களத்தின் ஊடாக முன் வைக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவு மன்னார் மாவட்டத்தின் சிலாவதுர பிரதேசத்தின் 20 ஹெக்டயார் நிலப் பகுதியில் செயற்படுத்தப்பட்டது. இக் கருத்திட்டத்தின் மூலம் உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு, கண்டல் சூழல் தொகுதிப் பாதுகாப்பு மற்றும் குடி மக்களது வாழ்க்கைத் தர நிலை பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டன.

கடல் அலைத் தடுப்பான்களை நிர்மாணிப்பதன் மூலம் இயற்கை வளங்கள் மற்றும் இடவமைப்புப் பாதுகாப்பு

கடல் அரிப்பு காரணமாக வங்கலை கிழக்கு கிராம சேவகர் பிரிவில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தோற்றம் பெற்றிருப்பதுடன், கடல் அலைத் தடுப்பானி ன் நிர்மாணிப்பின் தேவையின் பிரகாரம், அப் பி ரதேசத்தின் கடல் அலைத் தடுப்பானை நிர்மாணி ப்பதன் ஊடாகக் குடி மக்களது வாழ்வாதாரத்தைஉறுதிப்படுத்துவதற்கும், கிராமிய குடி மக்களது வாழ்க்கை நிலைகளை மேலுயர்த்துவதற்கு உறுதுணையாகவிருப்பதற்கும் எதி ர்ப்பார்க்கப்படுகின்றது.



வன மீள் நிலைப்படுத்துகை கருத்திட்டம்

கருத்திட்டத்தின் செயற்படுத்துகை பிரதேசத்தில் 40 ஹெக்டயார் நிலப் பகுதியில் காய, கங்சூரிய, கரத போன்ற தாவர இனங்களை பயிர்ச் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிர்ப் பல்வகைமை தொடர்பாக மதிப்பீடு செய்து அறி க்கையிடுதல்

மாதிரி 6 நில உறுக்களின் உயிர்ப் பல்வகைமையை மதி ப்பீடு செய்யும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.


மாதிரி நிலச் சுட்டி பிரதேசங்களில் விவசாயத் துறையை மேம்படுத்தும் செயற்பாடுகள்

வாழ்வாதாரத்துக்கென நிதியுதவிகளை கையளிக்கும் நோக்கில் விவசாய மதியுறைக் குழுவின் தொழில்நுட்ப உதவியுடன் கூடியதாக உரம், விதைகள், விதைத் தட்டுக்கள், மண் பரீட்சிப்புத் தொகுதிகள், பெட்டிகளை உலர்த்தும் துளி நீர்ப்பாசன அலகுகள் போன்ற விவசாய உழ் நுழைவுகளைக் கொள்வனவு செய்து விவசாயிகளி டையே பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாதிரி நிலச் சுட்டிகளில் பொருளாதார மதிப்பீடுகளை நடாத்துதல்

மாதிரி நிலச் சுட்டி 01 மற்றும் 02 இன் சமூக - பொருளாதார மதிப்பீடுகள் நிறைவடைந்திருப்பதுடன், அது கைத்தொழில் சேவைகள் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இறுதி மதிப்பீட்டு அறிக்கை IUCN நிறுவனத்துக்கு முன் வைக்கப்பட்டுள்ளது.



கருத்திட்டத்தின் பலனாளிகள் தன்னிச்சையான நேர் காணலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன், அவர்களது பாலினம், குடும்ப வகை, கல்வி போன்ற விடயங்களைக் கருத்திலெடுத்து மிகச் சிறந்த சமமான பலனடையும் தரப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மாதிரி நிலச் சுட்டிகளின் கீழ் விவசாயிகளைப் பயிற்றுவித்தல் மற்றும் விவசாய இயக்கங்களை செயற்படுத்துதல்.

விவசாயக் குழுக்களிலிருந்து கிடைக்கப் பெற்ற தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் துறை சார்ந்ததாகத் தயாரிக்கப்பட்ட விவசாயத் திட்டங்களை கருத்திலெடுத்த வண்ணம் விவசாய இயக்கங்கள் நிலை நாட்டப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயத் தலையீடு தொடர்பாக மெதவச்சிய, மஹவிலச்சிய, கண்டியிலுள்ள கிராமிய பிரதேசங்கள் மற்றும் கஹட்டகஸ்திகிலிய பிரதேசச் செயலாளர் பிரிவுகளிலிருந்து விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தம்புத்தேகம சேதன உரப் பயிற்சி, நுண் நீர்ப்பாசன நிலை நாட்டுகை, பயிர்களின் திட்டமிடுகை மற்றும் சந்தையில் வணிக உற்பத்தி நிலைப்பாடு தொடர்பாக அறிவூட்டும் பொருட்டு காகில்ஸ் வணிக சந்தையின் கீழ் தங்கியதாக உற்பத்திகள் தொடர்பான பயிற்சிக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் விவசாயிகளுக்குப் பயிற்றுவிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கிராமிய ரீதியாக விவசாய இயக்கங்கள் நிலை நாட்டப்பட்டு, விவசாயக் குழுக்களின் பங்கேற்புடன் பயிற்றுவிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



சுற்றுலாத் துறையுடன் ஒன்றிணைந்த வாழ்வாதாரத் தலையீடுகள் மற்றும் புதிய சுற்றுலாப் பயண இடங்களை அடையாளம் காணுதல்

மாதிரி நிலச் சுட்டி 03 மற்றும் மடு பிரதேசத்துக்கென சுற்றுலா விருத்தித் திட்டம் மற்றும் செயற்படுத்துகை உபாய வழிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. கிராமிய ரீதியாக சுற்றுலாத் துறை சார்ந்த கருத்திட்டங்களுடன் தொடர்புடைய பிரதேச ரீதியான குடி மக்களது வாழ்வாதார நிலைகளை மேலுயர்த்தும் நோக்கில் இத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பிரதேசத்தில் காணப்படுகின்ற சுற்றுலாப் பயண இடங்கள் தொடர்பாக கருத்திலெடுக்கையில், சுற்றுலாத் துறை தொடர்பாகப் புதிதாகத் தோற்றுவாய் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான சுற்றுலாப் பயண இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- மாவில் பாதுகாப்பு சுற்றுலாப் பயண மடு வலயத்தில் குடி மக்களை அடிப்படையாகக் கொண்ட சூழல் விக்கிரமங்கள் நிறைந்த சுற்றுலாப் பயணக் கருத்திட்டங்களின் ஊடாக கிராமிய பொருளாதார விருத்தி.
- அரிப்பு பிரதேசத்தில் குடிகளை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாத் துறை கருத்திட்டத்தின் ஊடாக கிராமிய பொருளாதாரத்தை விருத்தி செய்தல்.
- சிலாவதுர கயாக்குளி சுற்றுலாத் துறை வலயத்தில் குடி மக்களை அடிப்படையாகக் கொண்ட சூழல் விக்கிரமங்கள் நிறைந்த சுற்றுலாப் பயணக் கருத்திட்டங்களின் ஊடாக கிராமிய பொருளாதார விருத்தி.
- வங்கலை குடிகளை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாத் துறை கருத்திட்டத்தின் ஊடாக கிராமிய பொருளாதாரத்தை விருத்தி செய்தல்.

மேற்குறித்த திட்டங்களுக்குச் சமாந்தரமாக மல்வது பிரதேசத்துக்கென தற்சமயம் காணப்படுகின்ற சுற்றுலாத் துறை திட்டம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. நடைமுறை திட்டங்கள் தொடர்பான பகுப்பாய்வின் ஊடாகப் பிரதேசத்தின் சுற்றுலாத் துறை தோற்றுவாய்கள் மற்றும் இடர்ப்பாடுகள் தொடர்பாக அடையாளம் காண்பதற்கு இது உறுதுணையாகவமைந்தது.

கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொது மக்கள் தகவல் மற்றும் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டம்

கருத்திட்டத்தின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பாடல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- கருத்திட்டத்தின் முக நூல் பக்கம் மற்றும் யூ ரியூப் அலைவரிசையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுதல்.
- அடையாளமிடப்பட்ட பொது மக்கள் தொடர்பாடல் நிகழ்ச்சி, பாடசாலைகளை அண்டிய நிகழ்ச்சிகள் திட்டமிடப்படுதல்.
- தொடர்பாடல் உபாய வழிகளைத் தயாரித்தல்.
- உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் டிரிட்டல் விற்பனை தொடர்பாக இளைஞர்களை இலக்கிட்ட ஊடக பணிப் பட்டறைகள் நடாத்தப்படுதல்.

2.2.2 இலங்கையில் மொன்ரியல் கூட்டிணைப்பின் ஒழுங்கு விதிகளை செயற்படுத்துதல்

ஓசோன் தேய்மான இரசாயனப் பதார்த்தங்களை கட்டுப்படுத்தும் பொருட்டான மொன்ரியல் கூட்டிணைப்பின் கொள்கைகளை மிகச் சிறந்த வினைத் திறன் மிக்க வகையிலும், சீராகவும் இலங்கையில் செயற்படுத்தும் கேந்திர நிலையமாக 1994 ஆம் ஆண்டில் சுற்றாடல் அமைச்சின் கீழ் தேசிய ஓசோன் அலகு நிலை நாட்டப்பட்டதுடன், இதனூடாக மிகச் சிறந்த நன்னெரி மிக்க திட்டமிடலுடன் கூடியதாக மொன்ரியல் கூட்டிணைப்பின் கொள்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் இலங்கையினுள் செயற்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

2016 ஆம் ஆண்டில் மொன்ரியல் கூட்டிணைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஒரு திருத்தமான கிகாலி திருத்தத்துக்கு, இலங்கை தற்சமயம் ஒப்புதலளித்துள்ளது.

இக் கருத்திட்டத்தின் கீழ் குளிரூட்டிகள் மற்றும் வளிப் பதனாக்கித் துறையின் பங்குதார நிறுவனங்களாக தொழில்நுட்ப தொழிற் பயிற்சி கல்விப் பயிற்சி நிறுவனம், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் துறை கல்வி ஆணைக் குழுவுடன் (TVEC) கூட்டிணைந்து அடையாளம் கண்ட செயற்பாடுகளை மேலும் வலுவூட்டும் பொருட்டு பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டன. குளிரூட்டிகள் மற்றும் வளிப் பதனாக்கித் துறையின் புதிய தொழில்நுட்ப மாறுபாடுகள் தொடர்பாகப் பாரியளவான சேவைகளை வழங்குவோர் மற்றும் நடமாடும் வளிப் பதனாக்கித் துறையில் ஈடுபடுவோருடனும் ஒரு சில பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டன.

இலங்கையில் மொன்ரியல் கூட்டிணைப்பின் ஏற்பாடுகளை செயற்படுத்தும் பொருட்டு தொடர்புடைய தரப்பினருடன் கருத்திட்ட செயற்படுத்துகைக் குழுக் கூட்டம் 2023/06/26 ஆந் திகதி அமைச்சில் நடாத்தப்பட்டது.

HCFC இறக்குமதி செயன் முறையின் கீழ் 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கோட்டா வெளியிடுகை தொடர்பாக **(quota distribution)** ஓசோன் அழிவுக் காரணிகளாகவுள்ள இரசாயனப் பதார்த்தங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு செயற்படுகின்ற பொறி முறையின் கீழ் 156,059.09 கிலோ கிராம் HCFC இரசாயனத்தை இறக்குமதி செய்வதற்குத் தகைமை பெற்ற 19 நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு, அவை பகிர்ந்தளிக்கப்பட்டன.

2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் குளிரூட்டிகள் மற்றும் வளிப் பதனாக்கித் துறையில் ஈடுபட்டுள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதல் மற்றும் சீரான பயிற்சி பெறாத தொழில் முனைவர்களின் பணியைத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்த வண்ணம் சீரான பயிற்சியை வழங்கிய பிற்பாடு கல்வியை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டுச் செயன் முறையின் ஊடாக (RPL) தேசிய தொழிற் பயிற்சிச் சான்றிதழை (NVQ) கையளிப்பதற்குத் தேசிய ஓசோன் அலகு நிதி சார்ந்த பங்களிப்பையும், தொழில்நுட்பக் கொள் திறன் விருத்தியையும் விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் தேசிய ஓசோன் அலகுடன் கூட்டிணைந்து தேசிய இளைஞர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் பயிற்சி ஆணைக் குழு (TVEC) கூட்டிணைந்து 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 196 கைத்தொழில் நிபுணர்களுக்கென நிதி மற்றும் தொழில்நுட்பப் பங்களிப்பை வழங்கியுள்ளது. அக் கைத்தொழில் நிபுணர்களின் திறனை மேலுயர்த்தும் பொருட்டு துரிதமாக 02 தொழில் பணிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

தனிமைப்படுத்தல் மற்றும் முன் கப்பலேற்றுகை தொடர்பாக மீதைல் புரோமைட் பயன்பாட்டை கண்காணிக்கும் முகமாக நிகழ் நிலைத் தொகுதியை மீள் தயாரிக்கும் பொருட்டு தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவைக்கு (NPQS) நிதியியல் பங்களிப்பு வழங்கப்பட்டது. அத்தகைய அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிகழ் நிலைத் தொகுதியின் பயன்பாடு மற்றும் மொன்ரியல் கூட்டிணைப்பின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய மீதைல் புரோமைட் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் அதன் தேசிய ரீதியான செயன் முறைகள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று மீதைல் புரோமைட் பயன்பாட்டாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கென நடாத்தப்பட்டது.

மேலும், தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை மற்றும் களை நாசினிகள் பதிவுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் மொன்ரியல் கூட்டிணைப்பின் கொள்கைகளின் பிரகாரம், இலங்கையில் மீதைல் புரோமைட் (MeBr) பயன்பாடு, கட்டுப்படுத்துகை தொடர்பாகக் கொள்கை மற்றும் சட்ட உறுவாக்கம், அதன் திருத்தங்கள் மற்றும் செயற்படுத்துகை தொடர்பாக பேச்சு வார்த்தை நடாத்தப்பட்டது.

2.2.3 பொளிகுளோரினேட்டட் பைபீனைல் கழிவுகளையும், பொளிகுளோரினேட்டட் உள்ளடங்கிய உபகரணங்களையும் சூழல் நேயமிக்க வகையில் முகாமைத்துவப்படுத்தும் மற்றும் வெளியகற்றும் கருத்திட்டம்

பொளிகுளோரினேட்டட் பைபீனைல் (PCB) எனப்படுவது, நீண்ட கால வாழ் தகவுள்ள மாசாக்கியாகக் காணப்படுவதுடன், இதன் வாயிலாக புற்று நோய், வளர்ச்சிக் குறைப்பாடு போன்ற இன்னோரன்ன சுகாதாரப் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இவ் இரசாயனப் பதார்த்தம், 1970 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உலகம் முழுதும் தடை செய்யப்பட்டதுடன், தற்சமயம் இலங்கை மின்சார சபையின் பழைய மின் மாற்றியகள் மற்றும் வேல்டின் மின் மாற்றிகளில் இவற்றைக் காணலாம். தற்சமயம், குறிப்பாக வேல்டின் மின் மாற்றிகளில் பயன்படுத்துகின்ற மின் மாற்றி எண்ணெய்யின் மூலம் PCB பரம்பல் இடம் பெறுகின்றது.

இக் கருத்திட்டத்தின் நோக்கம், வலுச் சக்தித் துறை மற்றும் வேல்டின் துறையில் PCB உள்ளடங்கிய எண்ணெய்யைத் தன்னகத்தே கொண்ட மின் மாற்றிகளை அடையாளம் கண்டு அவற்றை சூழல் நேயமிக்க வகையில் வெளியகற்றுவதாகக் காணப்படுகின்றது.

இதனுடன் தொடர்புடையதாக ஒட்டுதல் பிரிவிலும், வலுச் சக்தி துறையிலும் PCB பொருள் கையிருப்பு ஆவணம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன், அவற்றை சூழலிருந்தும் வெளியகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாரியளவான வழங்குநர்கள் வசம் காணப்படுகின்ற 1069 மின் மாற்றிகள் பரீட்சிக்கப்பட்டு பொருள் கையிருப்பு ஆவணத்தை தயாரிக்கும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2021/09/15 ஆந் திகதிய இலக்கம் 21/1573/321/018 ஐ உடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், வெளியகற்றும் செயற்பாட்டை துரிதப்படுத்தும் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் முகமாக அமைச்சின் பங்கான ரூபா 68 மில்லியன் நிதித் தொகை இலங்கை மின்சார சபைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.



இது தவிர, வலுச் சக்தி மற்றும் ஒட்டுதல் பிரிவிற்கென PCB பயிற்சி மற்றும் பொருட் கையிருப்பு ஆவணச் சுவடி தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டிருப்பதுடன், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற் சார் பயிற்சி நிறுவனங்களின் பயன்பாட்டுக்கென நீண்ட கால வாழ் தகவுள்ள உயிரியல் எச்சங்கள் மற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் (PBT) தொடர்பான நூல் அச்சிடப்பட்டுள்ளது.

தாய்ப் பாலில் டயொக்சீன் இருப்பு தொடர்பாக ஆராயும் முகமாக மாதிரிகளை ஒன்று சேர்க்கும் செயற்பாடுகள் நிறைவடைந்திருப்பதுடன், ஆராய்ச்சிக்கென மாதிரிகளை சீனாவுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

2.2.4 லன் மிக்க புவிச் சுட்டி கருத்திட்டம்

நலன் மிக்க புவிச் சுட்டி கருத்திட்டத்தின் நிதியுதவியுடன் குளங்களின் தூண்டல் மிக்க பிரதேசங்களைப் பாதுகாத்தல் மற்றும் மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்யும் நோக்கத்துடன் பலுகஹ்வெவ பிரதேசச் செயலாளர் பிரிவின் முருங்காஹிட்டி மலை ஒதுக்கீட்டுக்கு உரித்தான புலுகஹ குளத்தின் தூண்டல் மிக்க வலயத்தில், 2023.11.10 ஆந் திகதி மர நடுகை நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டம் வன பராமரிப்புத் திணைக்களத்தினதும், ரரீரட்டை பல்கலைக்கழகத்தினதும் ஒன்றிணைந்த செயற்பாட்டின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.



நலன் மிக்க புவிச் சுட்டி கருத்திட்டத்தின் நிதி சார் பங்களிப்புடன் இலங்கை ரரீரட்டை பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட அடுக்கடுக்கான குளத் தொகுதிகள் மற்றும் மானிட வாழ்வாதார மேம்படுத்துகைகள் (International Conference on Eco Health Nexus: Bridging Cascade Ecology & Human Well-Being) சர்வதேச மா நாடு, 2023.12.19 - 20 ஆகிய இரண்டு தினங்களிலும் அனுராதபுரம் கோல்டன் மெங்கோ வலாகத்தில் நடாத்தப்பட்டது.

2.2.5 : முத்திரக் கழிவு மற்றும் நுண் பிளாஸ்ரிக் : பிளாஸ்ரிக் கழிவுகளை சுற்றாடல் நேயமிக்க வண்ணம் முகாமைத்துவப்படுத்துவதை விருத்தி செய்யும் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுத் தோற்றுவாயைத் தடுத்தல் மற்றும் குறைத்தல்

இக் கருத்திட்டம் சுற்றாடல் அமைச்சு மற்றும் ƒப்பானின் உலகலாவிய சுற்றாடல் உபாய வழி நிறுவனத்தினால் (IGES) UNEP/BRS செயலகத்தின் உதவியுடன் இலங்கையில் செயற்படுத்தப்படுகின்றது. இக் கருத்திட்டத்திற்கான நிதியங்கள் அபிவிருத்தி இணக்கப்பாட்டுக்கான நோர்வே இராச்சிய முகவராண்மை நிறுவனத்தினால் (NORAD) கையளிக்கப்படுகின்றன.

கருத்திட்டத்தின் நோக்கம் நாட்டின் நிலப் பகுதிகள் தொடர்பான செயற்பாடுகளின் வாயிலாக சமுத்திரஞ் சார்ந்த கழிவுகள் மற்றும் நுண் பிளாஸ்ரிக் தோற்றுவிப்பைத் தடுத்தல் மற்றும் அவற்றைக் குறிப்பிடத்தக்களவில் குறைப்பதன் மூலம் பேண்தகு அபிவிருத்தி இலக்கு (SDG) 14.1 இற்கு பங்களிப்பை வழங்குவதுமாகக் காணப்படுகின்றது.

பதார்த்த சுற்றோட்ட மதிப்பீடு (Material Follow Analysis) செயன் முறையின் ஊடாக தேசிய பிளாஸ்ரிக் கழிவுப் பொருட் பட்டியல் ஆவணம், சுற்றாடல் அமைச்சு மற்றும் ƒப்பானின் உலகலாவிய சுற்றாடல் உபாய வழி நிறுவனத்தினால் (IGES) பேராதனை பல்கலைக்கழகத்தின் மதியுறையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. அப் பொருட் குறிப்பு ஆவணத்தின் தரவுகளை ஆராய்வதன் ஊடாக அதன் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொதியிடல் / மீனவ / கழிவு நீர் (நுண் பிளாஸ்ரிக்) / புதிய பங்கேற்புகள் போன்ற பிரிவுகளின் ஊடாக பிளாஸ்ரிக் கழிவுகளைக் குறைக்கும் முகமாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியான நன்னெறி மிக்க பயன்பாடுகள் மற்றும் தொழில்நுட்பத்தை ஒன்று திரட்டி முன்னோடிப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு, அதனைத் தேசிய ரீதியாகச் செயற்படுத்துவதற்கு பரிந்துறைகள் முன் வைக்கப்படும்.


பாடசாலைகள், ஹோட்டல்கள் மற்றும் மீனவத் துறைமுகங்கள் போன்ற பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய மூன்று பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்துவதாக காலி நகரில் "பிளாஸ்ரிக் கழிவுகள் இல்லாத காலி நகரமாக மாற்றியமைத்தல்" எனும் தொனிப் பொருளின் கீழ் முன்னோடிக் கருத்திட்டமொன்று, IGES மற்றும் HELPO Sri Lanka இனால் ஒழுங்கு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

1) பிளாஸ்ரிக் அற்ற ஹோட்டல் நிகழ்ச்சித் திட்டம்

- தனிப் பயன்பாட்டு பிளாஸ்ரிக் உற்பத்திகள் / பண்டங்களிலிருந்து நீங்கி மீள் பயன்படுத்தக் கூடிய மாதிரிகள் / மீள் பயன்படுத்தக் கூடிய மாற்றீடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது காலியில், மூன்று ஹோட்டல்களில் முன்னோடிக் கருத்திட்டமொன்றாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், ஹோட்டல்களிலுள்ள சலவை இயந்திரங்களிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்ற நுண் பிளாஸ்ரிக் கழிவுகள் சுற்றுச் சூழலுக்கு வெளியிடப்படுவதை குறைக்கும் பொருட்டு இரண்டு ஹோட்டல்களில் நுண் பிளாஸ்ரிக் வடிகட்டிகளை பொருத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.
- இலங்கையிலுள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலாக ஹோட்டல் செயற்பாட்டாளர்களின் பிளாஸ்ரிக் பயன்பாட்டைக் குறைக்கும் பொருட்டு பேண்தகு செயன் முறை பின்பற்றப்பட்டு, வழிகாட்டல் வரைவொன்று தயாரிக்கப்பட்டது.

2) பிளாஸ்ரிக் அற்ற பாடசாலை நிகழ்ச்சித் திட்டம்

- பிளாஸ்ரிக் கழிவுகள் மற்றும் சமுத்திரக் கழிவுகளை குறைக்கும் முகமான செயற்பாடுகள் உள்ளடங்கிய பிரவேசிப்பின் மூலம் சிரார்களை அறிவூட்டும் பொருட்டு “Marching with the Next Generation towards a plastic waste - free future in Sri Lanka” தொடர்பான ஆசிரியர் வழிகாட்டி நூலொன்று மற்றும் மாணவச் செயற்பாட்டு நூலின் இறுதி வரைவு தயாரிக்கப்பட்டது. மேற்குறித்த வரைவு நூலின் பகுப்பாய்வு மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிக்கும் பொருட்டு பணிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.
- பிளாஸ்ரிக் கழிவுகளின் தாக்கம் காரணமாகப் பொது மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாகப் பாடசாலை மாணவர்களின் பங்குபற்றுதலுடன் குறுகிய காணொலிப் போட்டியொன்று நடாத்தப்பட்டது.



3) பிளாஸ்ரிக் அற்ற மீனவத் துறைமுகம் / மீனவக் குடி மக்கள்

இதற்குச் சமாந்தரமாக ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நி கழ்ச்சியின் (UNEP) முகவர்களின் பங்கேற்புடன் பணிப் பட்டறையொன்று நடாத்தப்பட்டது. "பிளாஸ்ரிக் கழி வுகளின் நாட்டு எல்லை இடப் பெயர்வைக் கட்டுப்படுத்துதல்" தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் தி ட்டமொன்றும், "பாசல் திருத்தம், பிளாஸ்ரிக் பொருட் பட்டியல் ஆவணம் மற்றும் முன்னோடிக் கருத்திட்டம்" தொடர்பாக பணிப் பட்டறையொன்றும் நடாத்தப்பட்டது.

இவ் அமைச்சின் கீழ் பணியாற்றுகின்ற புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தி யோகத்தர்களுக்கு பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான நான்கு பணிப் பட்டறைகள் கொழும்பு, கண்டி, காலி மற்றும் மட்டக்களப்பில் நடாத்தப்பட்டன.அச்சிடல் இடப் பரப்பைக் குறைப்பதன் மூலம் உணவுப் பொதி செய்கை பண்டங்களை மீள் சுத்திகரிக்கும் திறனை மேலுயர்த்தும் பொருட்டு உணவுற்பத்தியாளர்கள், உணவு உறை உற்பத்தியாளர்கள் மற்றும் இடைப்பட்ட பாவனையாளர்களுடன் உறையிடுகை சங்கமொன்றை நிலை நாட்டுவதற்கு அமைச்சு மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குடியியல் சலவை இயந்திரங்களின் மூலம் நுண் பி ளாஸ்ரிக் சுற்றுச் சூழலுக்கு விடுவிக்கப்படும் அளவைக் குறைக்கும் முகமாக நுண் பிளாS்ரிக் வடிகட்டியொன்றை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிக்கு பங்களிப்பை வழங்குவதற்கு Damro pvt ltd நி றுவனம் அமைச்சுக்குத் தமது விருப்பத்தைத் தெரிவி த்துள்ளது.

2.2.6 ஆசிய - பசுபிக் நாடுகளில் ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தப்பட்டு அகற்றப்படுகி ன்ற பிளS்ரிக் மற்றும் அதன் கீழான கழிவுகளை சூழல் நேயமிக்க வகையில் முகாமைத்துவப்படுத்துதல் தொடர்பான கொள் திறன் விருத்தி

கருத்திட்டமானது சீனாவின் BCRC (ஆசியா மற்றும் பசுபிக் வலயங்களுக்கான பாசல் கூட்டிணைப்பு வலய ரீதியான மத்திய நிலையம்) இணக்கப்பாட்டுடன் செயற்படுத்தப்பட்டது. இலங்கையில் ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தப்பட்டு அகற்றப்படுகின்ற பி ளாS்ரிக் (SUP) தோற்றுவாயைத் தடுத்தல் மற்றும் குறைத்தல் கருத்திட்டத்தின் நோக்கமாகக் காணப்படுகின்றது.

இக் கருத்திட்டத்திற்கு அபிவிருத்தி கூட்டிணைப்பு தொடர்பான நோர்வே முகவராண்மை (NORAD) நி றுவனத்தினால் நிதியங்கள் வழங்கப்படுகின்றன. இக் கருத்திட்டத்தின் மதியுறை சேவைகள் ƒயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையில் Tetra - pack பயன்பாடு தொடர்பான அடிப்படை கற்கை மற்றும் சேதன உரத்தை இடக் கூடிய பொதியிடல் பதார்த்தங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

சூழல் நற்புள்ள உற்பத்திகள் மற்றும் அவற்றை வி Šதீரணப்படுத்தக் கூடியவாறு சேதன உரமாக்கக் கூடிய பொதி செய்கை உறைகள் தொடர்பாக நுகர்வோரது கருத்துக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் கிழ் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தி யோகத்தர்களது உதவியுடன் இவ் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

மீள் சுழற்சி செய்யக் கூடிய பிளாS்ரிக் கழிவுகளை ஒன்று சேர்ப்போருக்கு "பிளாS்ரிக் கழிவு முகாமைத்து உத்திகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிகழ்ச்சி கள்" தொடர்பாக குறுகிய காலப் பாட நெறிகள் (4 நாட்கள்) நடாத்தப்பட்டன.

2.2.7 மினமாட்டா இணக்கப்பாட்டுக்கு உரித்தான விசேட சர்வதேச நிகழ்ச்சித் திட்டம் : இரசம் உள்ளடங்கிய மற்றும் இரசம் கலந்த கழிவுகளை குறைக்கும் பொருட்டான தேசிய கொள்திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்

மினமாட்டா இணக்கப்பாட்டுக்கு உரித்தான விசேட சர்வதேச நிகழ்ச்சித் திட்டம் (Specific International Programme) மற்றும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச் சூழல் நிகழ்ச்சித் திட்டத்துடன் (United Nations Environmental Programme) கூட்டிணைந்து ரூபா 32.15 மில்லியன் நிதி வசதிகளை வழங்குகின்ற இக் கருத்திட்டத்தின் பிரதானமான நோக்கம், இரசம் உள்ளடங்கிய அல்லது இரசம் கலந்த கழிவுகளை சூழல் நேயமிக்க வகையில் வெளியகற்றுதல் மற்றும் முகாமைத்துவத்துக்குத் தேவையான தேசிய கொள் தி றனை விருத்தி செய்வதன் ஊடாக இலங்கையில் மி னமாட்டா கூட்டிணைப்பை செயற்படுத்துவதற்கு உதவி வழங்குவதாகக் காணப்படுகின்றது. இக் கருத்தி ட்டத்தின் பிரதான உள்ளடக்கங்களாக கைத்தொழில், சுகாதார மற்றும் கல்வி சார் பிரிவுகளில் பயன்படுத்தப்படுகின்ற இரசம் உள்ளடங்கிய உற்பத்தி

களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய இரசம் உள்ளடங்காத சூழல் நேயமிக்க மாற்று உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல், இரசம் உள்ளடங்கிய கழிவு முகாமைத்துவம் தொடர்பாகத் தேசிய வழி காட்டியொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் கைத்தொழில், சுகாதாரம், கல்வி ஆகிய பிரிவுகளில் கொள்திறன் நிகழ்ச்சியை செயற்படுத்துதல் உள்ளடங்களாக இரசம் உள்ளடங்கிய கழிவு முகாமைத்துவம் தொடர்பாக அப் பிரிவுகள் மற்றும் பொது மக்களை அறிவூட்டும் பொருட்டு நிகழ்ச்சி யொன்றை செயற்படுத்துவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், கைத்தொழில், கல்வி, சுகாதாரம் மற்றும் குடியியல் துறை சார்ந்ததாக உள் நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாகக் காணப்படுகின்ற இரசம் உள்ளடங்காத மாற்று பொருட் பட்டியல் தயாரி க்கப்பட்டிருப்பதுடன், சாத்தியமான மாற்றீடுகளை அறி ந்து கொள்ளும் பொருட்டு கிரயப் பலன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே இரசம் உள்ளடங்காத மாற்றீடுகள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் மூலம் மேற்குறித்த பிரிவுகளின் உற்பத்தி மற்றும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மினமாட்டா இணக்கப்பாட்டின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு முன் மொழிவுகள் முன் வைக்கப்படும்.

மேலும், இரசம் உள்ளடங்கிய உபகரணங்களுக்கான மாற்றீடுகளைக் காட்சிப்படுத்துதல் இக் கருத்திட்டத்தி ன் கீழ் அடையாளம் காணப்பட்ட ஒரு செயற்பாடாகக் காணப்படுகின்றது. இச் செயற்பாட்டை செயற்படுத்தும் பொருட்டு "ரி^வே சீமாட்டியார் சிறுவர் வைத்தியசாலை" தேர்ந்தெடுக்கப்பட்டது. வைத்தியசாலையில் பயன்படுத்தப்படுகின்ற இரசக் குருதி அமுக்கமானி, இரச வெப்பமானி மற்றும் சீ எப் எல் மின் குமிழ், இரசம் அற்ற மாற்றீடுகளின் மூலம் மீள் நிலைப்படுத்தும் பொருட்டு கருத்திட்டத்தினால் பங்களிப்பு வழங்கப்படும். அதன் பிரகாரம், வைத்தியசாலை தொடர்பாக 120 அனரொய்ட் குருதி அமுக்கமானிகள், 200 டிரீட்டல் வெப்ப மானிகள் மற்றும் 1400 எல் ஈ டீ மின் குமிழ்கள் கையளிக்கப்பட்டன. இரசம் உள்ளடங்கி ய உபகரணங்கள் மற்றும் சீ எப் எல் மின் குமிழ்களை மீள் நிலைப்படுத்தும் செயற்பாட்டுக்கு மேலதிகமாக வைத்தியசாலையில் பயன்படுத்தப்படுகின்ற பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட 295.6 கிலோ கி ராம் சீ எப் எல் மின் குமிழ்களை மீள் சுத்திகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் கருத்திட்டத்தின் மூலம் இட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இரசக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய தொழில்நுட்ப வழிகாட்டியானது தொடர்புடைய பங்குதாரிகளின் பங்கேற்புடன் நடாத்தப்பட்ட பணிப் பட்டறைத் தொடரொன்றினூடாகத் தயாரி க்கப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டியின் வாழ்க்கை சுற்று வட்ட பிரவேசிப்பைப் பின்பற்றிய வண்ணம் இது தயாரிக்கப்பட்டிருப்பதுடன், இதனூடாக பெருகைக் கட்டத்திலிருந்து அனுகுதல், இடைக் கால களஞ்சி யப்படுத்துகை, கழிவுகளை வேறு பிரித்தல், சேமித்தல் மற்றும் இறுதியில் இரசத்துடன் தொடர்புடைய பதார்த்தங்களைப் பொதியிடுதல் மற்றும் அடையாளமி டுதல், பாதுகாப்பு மிக்கதாக இடப் பெயர்தல் வரையான தேவையான தொழில்நுட்ப வழிகாட்டிகள் வழங்கப்படும்.

பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் (TOT) பொருட்டு மூன்று நிகழ்ச்சிகள் கைத்தொழில், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக 17 பயிற்சி நிகழ்ச்சிகள் உள்ளடங்களாக பயிற்சி நிகழ்ச்சித் தொடரொன்று செயற்படுத்தப்பட்டது. இரசக் கழி வுகளை முகாமைத்துவப்படுத்தும் பொருட்டு 06 பயி ற்சி மொடியுல்களை உள்ளடக்கிய பயிற்சிப் பாட நெறி யொன்று தயாரிக்கப்பட்டதுடன், மேற்குறித்த விடயப் பரப்பின் கீழ் தங்கியதாக அனைத்துப் பயிற்சி நிகழ்ச்சி களும் நடாத்தப்பட்டன.

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக இரசம் உள்ளடங்கிய உபகரணங்கள் மற்றும் உற்பத்திகளைப் பாதுகாப்பு மிக்கதாக கையாளுதல் தொடர்பாக அறி வூட்டும் பொருட்டு 25 அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. இது தவிர, இலக்கிட்ட குழுக்கள் மற்றும் நாட்டின் பொது மக்களை அறி வூட்டும் பொருட்டு இரச முகாமைத்துவம் தொடர்பான கைச்சுவடிகள் மற்றும் சுவரொட்டிகள் தயாரி க்கப்பட்டுள்ளன.

2.2.8 ஐக்கிய நாடுகளின் பாலைவனமயமாக்கத்தை தடுக்கும் கூட்டிணைப்பின் மேற்பார்வை மற்றும் அறிக்கையிடலை விருத்தி செய்வதற்கு முன் வைக்கும் பொருட்டு பங்குதார நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவர்களின் கொள் திறனை விருத்தி

உலகலாவிய சுற்றுச் சூழல் வசதிகள் நிகழ்ச்சித் (GEF) திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற இக் கருத்திட்டத்தி ன் மூலம் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட வண்ணம் தயாரிக்கப்பட்ட தேசிய தரவுத் தொகுதியை புதுப்பிக்கும் பொருட்டு தேசிய ரீதியாக நிறுவன மற்றும் தொழில்நுட்பக் கொள் திறனை விருத்தி செய்தல் மற்றும் நிலம் தொடர்பான பிரச்சி னைகளுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களுக்கு உதவி வழங்குதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் தி ட்டங்களை நடாத்துதல் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் ஆகிய பணி களை முன்னெடுப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. UNCCD கருத்திட்டத்தின் மூலம் இலங்கையின் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தி னால் முன்னெடுக்கப்படுகின்றது. அத்தகைய அடிப்படையில் பெறப்படுகின்ற தரவுகள் மற்றும் தகவல்கள் UNCCD அறிக்கையிடல் கருத்திட்டத்தி ன் தேவைப்பாடுடன் கூட்டிணைப்பதன் தேவையின் அடிப்படையில் தரவுகளின் தர நிலையை மேலுயர்த்தும் பொருட்டு இப் பணிகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் தேவை மேலெழுந்துள்ளது.

காணி அழிவு தொடர்பான நிலைப்பாட்டு அறிக்கையிடுகைக்குத் தேவையான தரவுகளை ஒன்று சேர்த்தல், தரவு தொகுதியை நிலை நாட்டுதல் போன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்குத் தேவையான நிலப் பயன்பாட்டுத் தரவுகள், நிலத்தில் ஏற்படுகின்ற மாறுபாடுகள் தொடர்பான தகவல்கள், பயிர்ப் பரம்பல் வலயங்களை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றைப் பாகுபடுத்தும் செயற்பாடுகள் காணிப்.

2.2.9 விவசாய, வனாந்திர மற்றும் பிற காணிப் பயன்பாட்டுத் துறை தொடர்பான வெளிப்பாட்டுத் தன்மையின் விருத்தி செய்யப்பட்ட சட்டகத்தை விருத்தி செய்யும் கருத்திட்டம்

விவசாய, வனாந்திர மற்றும் பிற காணிப் பயன்பாட்டு துறை தொடர்பான வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்திய சட்டகத்தைத் தயாரிக்கும் கருத்திட்டத்திற்கென உலகலாவிய சுற்றுச் சூழல் வசதியின் நிதி கையளிப்பின் கீழ் சுற்றாடல் அமைச்சினால் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய இயக்கத்தின் கூட்டிணைப்புடன் குறித்த பணிகள் முன்னெடுக்கப்படும் பாரிS உடன்படிக்கையின் 13 ஆவது பிரிவின் பிரகாரம், பங்குதார இராச்சியங்களினால் காலநிலை மாற்றங்கள் தொடர்பாக எடுக்கப்படுகின்ற செயற்பாடுகளின் விருத்தி வெளிப்பாட்டுத் தன்மையுடன் கூடியதாக அறிக்கையிடும் பொருட்டு அதனுடன் தொடர்புடைய விவசாய, வனாந்திர மற்றும் பிற காணிப் பயன்பாட்டுத் துறையுடன் தொடர்புடைய நிறுவனங்களின் கொள் திறன் விருத்தி, தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பின் விருத்தி அறிக்கையிடலின் கீழ் பசுமை வீட்டு வாயு பொருட்பட்டியல் ஆவணம், பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைக்கும் செயற்பாடுகள் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு இயைபாக்கமடையும் செயற்பாடுகளின் விருத்தி அறிக்கையிடலின் கீழ் தேவையான தரவுகள் மற்றும் தகவல் அளவீடு, உண்மைப்படுத்துகை மற்றும் அறிக்கையிடல் தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.இதற்கென தொடர்புடைய நிறுவனங்களின் தொழில்நுட்ப அறிவுத் திறனை விருத்தி செய்யும் பொருட்டு பங்குதாரர்களை அறிவூட்டுதல் மற்றும் பசுமை வீட்டு வாயு கணிப்பீடு தொடர்பான பயிற்சிப் பணிப் பட்டறை கருத்திட்டத்தின் மூலம் நடாத்தப்பட்டது. அவ்வாறே, வெளிப்படைத் தன்மையை விருத்தி செய்த சட்டகத்தை (Enhanced Transparency Framework) தயாரிக்கும் பொருட்டு அறிவூட்டல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன

தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பின் கீழ் இலங்கை முன் வைத்துள்ள காலநிலை மாற்றங்களுக்கு இயைபாக்கமடைகையில் காணப்படுகின்ற செயற்பாடுகளின் விருத்தியை அறிக்கையிடுகையில் வெளிப்பாட்டுத் தன்மை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் தரவுகள் மற்றும் தகவல்களை ஒன்று சேர்க்கும் பொருட்டு தொடர்புடைய நிறுவனத்தை அறிவூட்டுவதற்குப் பல்வேறு நடைமுறை ரீதியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும் விருத்தி விருத்தி அறிக்கையிடலின் போது அளவீடு, அறிக்கையிடல் மற்றும் உண்மைப்படுத்தல் தொடர்பாகக் கவனம் செலுத்தி அது தொடர்பான தரவுத் தொகுதியொன்றை நிலை நாட்டும் பொருட்டு பங்குதாரர்களின் பங்கேற்புடன் தொழில்நுட்பக் குழுவொன்று நிலை நாட்டப்பட்டது. அத் தரவுத் தொகுதியை நிலை நாட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. இதற்கென அவ் விடயப் பரப்பு தொடர்பான விரிவான அறிவுத் திறன் கொண்ட மதியுறையாளர்களின் பங்கேற்புடன் இந் நிகழ்ச்சித் திட்டம் / பணிப் பட்டறை நடாத்தப்பட்டது.

2.2.10 ஐக்கிய நாடுகளின் பாலைவனமயமாக்கத்தை தடுக்கும் கூட்டிணைப்பு தொடர்பான தேசிய அறிக்கையிடல் செயன் முறை

இவ் அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பாக உலகலாவிய சுற்றுச் சூழல் வசதிகளின் கீழ் காணப்படுகின்ற ஐக்கிய நாடுகலீன் பாலைவனமயமாக்கத்தை தடுக்கும் கூட்டிணைப்புடன் தொடர்புடைய தேசிய அறிக்கையிடல் கருத்திட்டத்தின் மூலம் நிதியங்கள் வழங்கப்படும். இக் கருத்திட்டத்தின் மூலம் ஐக்கிய நாடுகளின் பாலைவனமயமாக்கத்தைத் தடுக்கும் கூட்டிணைப்பின் அறிக்கையிடல் செயற்பாட்டுக்குத் தேசிய ரீதியாக தரவுகளை மாற்றீடு செய்வதற்குத் தேவையான பின்னணி உறுவமைக்கப்படும். இப் பணி நோக்கத்திற்கென நிலத்துடன் தொடர்புடைய தரவுகள் தோற்றுவிக்கப்படும் அரசுகள் மற்றும் அரசு சார்பற்ற தரப்பின் பல நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதற்கென மண் சேதன காபன் (Soil organic carbon data) நில உற்பத்தித் திறன் (Land productivity data) மற்றும் நில ஊடுறுவல் தரவுகள் (Land cover data) ஆகிய 03 வகுதிகளினதும் தரவுகளை ஒன்று திரட்டும் செயற் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன

அத் தரவுகளுடன் தொடர்புடையதாக இலங்கையின் மண் சேதனக் காபன் வரைபடம், நில வினைத் திறன் வரைபடம் மற்றும் நில ஊடுறுவல் தொடர்பான தரவு வரைபடம் தயாரிக்கப்பட்டது. மேலும், பெறப்படுகின்ற தரவுகளின் பிரகாரம் தரவுத் தொகுதியொன்று அமைச்சில் நிலை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து தரவு அறிக்கைகளும் ஐக்கிய நாடுகளின் பாலைவனமயமாக்கத்தைத் தடுக்கும் கூட்டிணைப்புக்கு அறிக்கையிடும் செயற்பாடு நிறைவடைந்துள்ளது.

2.3 அமைசின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்களின் விருத்தி

2.3.1 மத்திய சுற்றாடல் அதிகார சபை

சுற்றாடல் மாசாக்கக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களினால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் செயன் முறை செயற்படுத்தப்படுவதன் வாயிலாக இச் செயற்பாடு முன்னெடுக்கப்படும்.

சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தின் வகுதி	மொத்த கைத்தொழில்களின் எண்ணிக்கை	வெளியிடப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் எண்ணிக்கை
"அ" வகுதி	882	668
"ஆ" வகுதி	14,424	10,887
"இ" வகுதி	12,126	9,999

- இலங்கை முதலீட்டு சபையின் 932 கைத்தொழில்களுடன் தொடர்புடைய சுற்றாடல் பாதுகாப்பு உரிமமும், 07 முதலீட்டு வலயங்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமமும் வழங்கப்பட்டுள்ளது.

- சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றோரது தகைமை நிலையைப் பின்னாராய்தல், "அ" வகுதிக்கு உரித்தான கைத்தொழில்கள் - 417, "ஆ" வகுதிக்கு உரித்தான கைத்தொழில்கள் - 2,167 மற்றும் "இ" வகுதிக்கு உரித்தான கைத்தொழில்கள் - 1,767 தொடர்பான மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நடுத்தர அளவிலான கைத்தொழில்களை நிலை நாட்டுகையில் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கும் பொருட்டு, 8 நிபுணர் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருப்பதுடன், தொழில்நுட்ப வழி காட்டலை முன்னெடுப்பதன் வாயிலாக 31 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தொடர்புடைய தொழில்நுட்ப வழிகாட்டல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- கலி பவுசர் சேவைகளை வழங்குவோரது சேவையை சீர்ப்படுத்தும் நோக்கில் 99 கலி பவுசர் சேவை வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

- மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 28 ஆய்வு கூடங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குகின்ற 55 நிபுணர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், பதிவு செய்யப்பட்ட ஆய்வு கூடங்கள் மற்றும் நிபுணர்களை அறிவூட்டும் பொருட்டு 2 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- இது தவிர, உமிழ்வு மற்றும் வெளியகற்றுகையை கட்டுப்படுத்தும் முகமாகப் புதிதாக 663 கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பரிந்துறைகள் வழங்கப்பட்டன. அவ்வாறே, 890 கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பரிந்துறைகள் வெளியிடப்பட்டன.

- தியவன்னா ஓயவின் அல்கா பரம்பல் தொடர்பாக ஆராய்ந்து, மேற்பார்வையிடும் பொருட்டு பாராளுமன்ற குளத்தின் நீரேந்து பிரதேசத்தில் நிலை நாட்டப்பட்டுள்ள 47 இலக்கிட்ட தோற்றுவாய்கள் பின்னாராயப்பட்டன. தியவன்னா ஓயவை அண்டியதாக அமைந்துள்ளகைத்தொழில்கள் மற்றும் அரச நிறுவனங்களை அறிவூட்டும் பொருட்டு 02 நிகழ்ச்சிகள்.

நீர்த் தர பின்னாராய்ச்சி செயற்பாடுகள்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆய்வு கூடங்களின் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நீர்த்தேக்கங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

ஆய்வு கூடம்	நீர்த்தேக்கத்தின் பெயர்	அவதானிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை
பிரதான ஆய்வு கூடம்	களனி ஆறு	17
	மா ஓய	08
	பொல்கொட வாவி	06
	தியவன்னா வாவி	08
கிழக்கு மாகாண ஆய்வு கூடம்	கந்தளாய் குளம்	05
	மகாவலி தாழ்	08
வட மத்திய மாகாண ஆய்வு கூடம்	நுவர வாவி	06
	திŠஸ வாவி	04
கம்பஹா மாவட்ட ஆய்வு கூடம்	அத்தனகலு வாலி	06
சபரகமுவா மாகாண ஆய்வு கூடம்	களு கங்கை	12
மத்திய மாகாண ஆய்வு கூடம்	கிரெகரி வாவி	07
	நுவர வாவி	05
	மகாவலி மேல்	08
ஊவா மாகாண ஆய்வு கூடம்	பதுலு ஓய	07
	கும்புக்கன் ஓய	03
	மெனிக் கங்கை	05
தென் மாகாண ஆய்வு கூடம்	நில்வலா ஆறு	08
வட மேல் மாகாண ஆய்வு கூடம்	குருணாகலை வாவி	04
	சென்னருவ வாவி	03
	மீ ஓய	06
	தெதுரு ஓய	08
	கலா ஓய	04


வாயு வளங்கள் முகாமைத்துவம் மற்றும் பி ன்னாராய்ச்சி செயற்பாடுகள்

1. சுற்றோட்ட வாயுத் தராதர மேற்பார்வை நிகழ்ச்சி

பத்தரமுல்லை மற்றும் கண்டி நகரில் நி றுவப்பட்டுள்ள இரண்டு நிகழ் நிலை தானியங்கி காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்கள் PM10 (10 மைக்ரோனுக்கு குறைவான காற்றியக்க விட்டம் கொண்ட துகள்கள்), PM2.5 (2.5 மைக்ரோனுக்குக் குறைவான காற்றியக்க விட்டம் கொண்ட துகள்கள்), நைட்ரஜின் டை ஒக்சைட்டு (NO2) ஆகியவற்றை அளவிடும் , சுற்றுப்புற வளி மண்டலத்தில் சல்பர் டை ஒக்சைட்டு (SO2), கார்பன் மொனாக்சைட்டு (CO) மற்றும் ஓசோன் (O3) மற்றும் வானிலை அளவுருக்கள் ஆகியன அளவிடப்படுகின்றன.

இலங்கையில் காற்றின் தர முகாமைத்துவத்தில் பங்கேற்கும் பங்குதார அரச நிறுவனங்களின் ஆதரவுடன் தேசிய காற்றுத் தரச் சுட்டெண் (AQI-SL) தயாரிக்கப்பட்டது. சர்வதேசத் தர நிலைகள் மற்றும் உள்ளூர் விதிமுறைகளை கருத்தில் எடுத்த வண்ணம் விரிவான காற்றின் தரக் குறியீட்டை நி றுவுவதே இதன் பிரதான நோக்கமாகும்.

இலங்கையின் வாயுத் தராதர நிலைகளின் துரித துண்டிப்பு ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் துரித வெளிப்படைத் தன்மையுடனான செயலாற்றுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. (CRAP-DAQ-SL).



2. இசைவாக்கத்தை பரீட்சித்தல் மற்றும்இசைவாக்க மேற்பார்வை அறிக்கைகளை வெளியிடுதல்

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு காற்றின் தராதர நிலை மற்றும் ஒலி மட்டத்தை அளவிடும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

3. குடியியல் வாயுத் தர நிலையை மேலுயர்த்தும் கருத்திட்டம்

காதார அமைச்சுடன் கூட்டிணைந்து கொழும்பு, அம்பாந்தோட்டை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் 04 அறிவூட்டுகை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதன் போது, ஒன்று திரட்டப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அறிக்கையை வெளி யிடுவதற்கு இது வரைவுபடுத்தப்பட்டது.

4. வாயுத் தர முகாமைத்துவம் (Air Parif) தொடர்பாக இலங்கையிலுள்ள உத்தியோகத்தர்களி

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன் முறை

விபரம்	கருத்தி ட்டங்களின் எண்ணிக்கை
சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு (EIA) வகையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தி	01
துணை சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு (EIA) வகையின் கீழ் அங்கீகரி	01
பூர்வாங்க சுற்றுச் சூழல் மதிப்பீடு (EIA) பிரிவின் கீழ் அங்கீகரி க்கப்பட்ட திட்டங்கள்	691
அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் EIA / SEIA சுற்றுச் சூழல் அனுமதி களின் செல்லுபடியாகும் காலப் பகுதி நீடிப்புகள்	03
சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஒப்புதலுக்காக முகவராண்மை நி றுவனங்களினால் பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	19
EIA / SEIA செயல் முறையைச் செயற்படுத்துவதற்குத் தேவையான ஏனைய தொழில்நுட்ப ஆதரவைப் பி ற கருத்திட்ட ஒப்புதல் முகவராண்மை நிறுவனங்களுக்கு வழங்குதல்.	28
EIA சார் பிரச்சினைகள் மற்றும் பிற தொடர்புடைய பிரச்சினைகளைத்	03
EIA / SEIA இனால் அங்கீகரி க்கப்பட்ட கருத்திட்டங்களை பின் ஆராய்தல்	28

இறுதி அறிக்கையின் பிரகாரம், தயாரிக்கப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் நி பந்தனைகள் சுற்றாடல் அமைச்சின் ஊடாக சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு முன் வைக்கப்பட்டுள்ளது.

உபாய வழி சுற்றாடல் மதிப்பீட்டு செயற்பாடுகள்

கொழும்பு மா நகர சபைக்கு உரித்தான பிரதேசங்கள் தொடர்பாக மழை நீர் சுற்றோட்ட முகாமைத்துவத் தி ட்டமானது, கருத்திட்டத்தின் உபாய வழி சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன் முறை செயற்படுத்தப்பட்ட பிற்பாடு, மேல் மாகாணத்தின் திண்மக் கழிவு முகாமைத்துவ தலைமைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் பரிந்துறைகள் முன் வைக்கப்பட்டன.

முதுராரீவெல சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசத்தில் அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கிய வண்ணம் முதுராரீவெல சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசத்தின் வர்த்தமானி அறிவிப்பு 2023.11.17 ஆந் திகதிய இலக்கம் 2358/65 ஐ உடைய அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் திருத்தத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மேலும் 22 சுற்றாடல் பாதுகாப்பு முகாமைத்துவக் குழுக் கூட்டத் தொடர்களும், 36 சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களின் பின்னாராய்ச்சிச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன

உலக ஈர நில தேசிய நிகழ்ச்சி நிரலுக்குச் சமாந்தரமாக "ஈர நில மீள் சீரமைப்பிற்கான காலம்" எனும் தொனிப் பொருளின் கீழ் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. மேலும், ஈர நிலங்களைப் பாதுகாத்தல் தொடர்பான சாதகமான கோட்பாடுகளைக் கட்டியெழுப்பும் நோக்கில் புகைப் படப் போட்டியொன்றும், "ஈர நிலங்களுக்கு ஒரு நிமிடம்" எனும் தொனிப் பொருளின் கீழான காணொளிப் போட்டியொன்றும் நடாத்தப்பட்டது.



கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகள்

வட மாகாண அலுவலகத்தினால் இலத்திரனியல் கழிவுகளை ஒன்று திரட்டும் நிகழ்ச்சியொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இதன் கீழ் ஒன்று திரட்டப்பட்ட மொத்த இலத்திரனியல் கழிவுகளின் எண்ணிக்கை 56 தொன்களாகக் காணப்பட்டன.

திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகளின் கீழ் 2023 ஆம் ஆண்டில் கப்பல்களிலிருந்து ஆபத்தற்ற / மாசாக்கமற்ற மீள் சுத்திகரிக்கக் கூடிய கழிவுகளை ஒன்று திரட்டுவோருக்கென 22 சுற்றாடல் சார் பரிந்துறைகள் வெளியிடப்பட்டிருப்பதுடன், அவற்றுள் 17 பரிந்துறைகள் 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

அபயாகரமான கழிவு தொடர்பான ஒழுங்கு விதிகளைச் செயற்படுத்துதல்

கூட்டிணைப்பு / உரிமைப் பத்திரத்தின் வகை	±ண்ணிக்கை
அபாயகரமான கழிவு தொடர்பான ஒழுங்கு விதிகளை செயற்படுத்துதல்	
ப வகுதியிடப்பட்ட கழிவு முகாமைத்துவ உரிமைப் பத்திரங்களை வெளியிடுதல்	581
பாசல் கூட்டிணைப்பை செயற்படுத்துதல்	
¿¼¡த்தப்பட்ட "பாசல்" தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை	05
,ழிவுகளை (மூலப் பொருட்கள்) இறக்குமதி செய்யும் பொருட்டு கையளிக்கப்பட்டுள்ள இறக்குமதி அனுமதிகளின் எண்ணிக்கை	54
இறக்குமதி பகுப்பாட்டு அனுமதி	477
வெளியிடப்பட்ட ஏற்றுமதி விருப்புகளின் எண்ணிக்கை	115
¿¡ட்டு எல்லைகளின் ஊடான இடப் பெயர்வு தொடர்பான அனுமதிகள்	40
வெளியிடப்பட்ட மீள் கப்பலேற்றுகைகளின் எண்ணிக்கை	20
ரொட்டர்டேம் இணக்கப்பாட்டை செயற்படுத்துதல்	
¨,த்தொழில் இரசாயனப் பதார்த்தங்களின் முகாமைத்துவம் தொடர்பான தொழில்நுட்ப மதியுறைக் குழு (TACMIC)	02
இரசாயனப் பதார்த்த ஏற்றுமதிக்கான அனுமதிகள்	329
அ்பெ்டோ் இறக்குமதிக்கான இறக்குமதி அனுமதிகள்	79

சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளை அதிகாரம் பெறச் செய்தல்

2023 ஒக்டோபர் 1 ஆந் திகதியிலிருந்து செயற்படக் கூடிய வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிளா்ரிக் உற்பத்திகளின் பயன்பாட்டைத் தடுத்தல் தொடர்பாக சட்ட ஒழுங்கு விதிகள் உள்ளடங்கிய இலக்கம் 2341/30 ஐ உடைய வர்த்தமானி அறிவிப்பு 2023.07.19 ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் ஒரு தடவை பயன்படுத்தப்பட்டு அகற்றப்படுகின்ற குடிபானக் குழாய்கள் மற்றும் கரைப்பான்கள், ஒரு தடவை பயன்படுத்தப்பட்டு அகற்றப்படுகின்ற பிளா்ரிக் உணவு உறைகள், பிளா்ரிக் பூ மாலைகள், பிளா்ரிக் இடியப்பத் தட்டுகள் போன்றன இதன் கீழ் தடை செய்யப்பட்டன.

PET மீள் சுழற்சியை விருத்தி செய்தல் மற்றும் PET நீர்ப் போத்தல்களின் மூலம் ஏற்படக் கூடிய கழிவுத் தோற்றுவாயை குறைக்கும் பொருட்டு 2023 ஒக்டோபர் 1 ஆந் திகதியிலிருந்து நிறமூட்டப்பட்ட பொலி எதிலீன் டெரெப்தலேட் (PET) உள்ளடங்கிய போத்தல்களை உற்பத்தி செய்தல், பொலிவைனைல் குளோரினேட்டட் (PVC) பயன்பாடு, போத்தல்களில் மேலதிக அச்சிடலாக பொலித்தீன் அல்லது பிற ஏதாவதொரு உக்காத பதார்த்தத்தை பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டது.

கிரீன் பார்க் ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவ நிலையத்தின் மூலம் 2023 ஆம் ஆண்டில் 2733120 கிலோ கிராம் கழிவுகள் முகாமைத்துவப்படுத்தப்பட்டுது. திண்மக் கழிவு முகாமைத்துவப் பிரிவின் கீழ் மிகச் சிறந்த அரச சேவையை கையளிக்கும் பொருட்டு USAID உடன் கூட்டிணைந்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கென வகுதியாக்கல் செயன் முறை தொடர்பான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன.

ஆராய்ச்சிச் செயற்பாடுகளின் விருத்தி

ழிவுகளை குறைத்தல் மற்றும் சீராக வெளியகற்றுதல் தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகளை செயற்படுத்துவதுடன் தொடர்புடையதாக 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முற்று முழுதாக 7,236 சுற்றி வலைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அச் சுற்றி வலைப்புகளின் விருத்தி 81% ஆன பங்கை எட்டியுள்ளது. மேலும் 122 ஒழுங்கு விதி மீறல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஒழுங்கு விதிகள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சி

இலங்கை பொலிS நிறுவனத்தினதும், சமுத்திர பல்கலைக்கழகத்தினதும் மாணவர்களது பங்கேற்புடன் கொழும்பு கோட்டை மற்றும் புறக் கோட்டை பிரதேசத்தில் பிளாSரிக்கை சீராக முகாமைத்துவப்படுத்தும் பொருட்டு நடைமுறையிலுள்ள சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பாக கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் அறிவூட்டப்பட்டனர்.

தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட இலக்கம் 2034/36 ஐ உடைய வர்த்தமானி அறிவிப்பு தொடர்பாக பொது மக்களை அறிவூட்டுதல் தொடர்பாக ஆராயப்பட்டது.

சுற்றாடல் விருத்திச் செயற்பாடுகள்

2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பிளாSரிக் மூலம் ஏற்படக் கூடிய சூழல் மாசாக்கம் தொடர்பாக விபரங்கள் உள்ளடங்கிய 7,450 சுவரொட்டிகள், 20,548 கைச் சுவடிகள், 225 சொபாகெத சஞ்சிகைகள், 3,426 செய்தி மடல்கள் மற்றும் 2,496 நூல்கள் பொது மக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாகாண அலுவலகங்களுடன் கூட்டிணைந்து பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய இலக்கிட்ட குழுக்களை அறிவூட்டும் பொருட்டு அத்திடிய, குண்டசாலை, ரூமSஸல மற்றும் ரந்தெனிகல - கேகாலை இயற்கைத் திடல் நிலையங்களில் விழிப்புணர்வூட்டும் பொருட்டு 59 நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டன.

அறிவூட்டல் நிகழ்சிகள்

- 2023 ஆம் ஆண்டில் 4 பல்கலைக்கழகங்களுக்கென 6 கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- உலக ஓசோன் தினத்தையொட்டி ஒரு அறிவூட்டல் நிகழ்ச்சியும், உலக சுத்திகரிப்பு தினம் தொடர்பாக 3 நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.
- கலாச்சார நிகழ்வுகளின் போது கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக பொது மக்களை விழிப்புணர்வூட்டும் துண்டுப் பிரசுரங்களின் விநியோகிப்பு மற்றும் தூய்மைப்படுத்துகை நிகழ்ச்சிகள் போன்ற சமூக பங்கேற்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- 2023 உலக சுற்றுச் சூழல் தினத்தன்று "பிளாSடிக் மாசுபாட்டை முறியடி" எனும் தொனிப் பொருளின் கீழ் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- அரச சார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் fனாதிபதி சுற்றுச் சூழல் விருது 2021/2022 வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- 9 "சோபாகெத" வானொலி நிகழ்ச்சிகள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டன.
- 2023 ஆம் ஆண்டில் சுற்றுச் சூழல் தொடர்பான செய்தி மடல்கள் (5,000 பிரதிகள்) மற்றும் இயற்கை விடயங்கள் உள்ளடங்கிய இதழ் (1,000 பிரதிகள்) ஆகியன வெளியிடப்பட்டன.
- உலக சதுப்பு நில தினத்தைக் கொண்டாடும் வகையில், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாகாண மற்றும் மாவட்ட அதிகாரிகளினால் இருபத்தி மூன்று நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- சர்வதேச உயிர்ப் பல்வகைமை தினத்தைக் கொண்டாடும் வகையில் உயிர்ப் பல்வகைமை விருத்தியை தோற்றுவித்தல் எனும் தொனிப் பொருளின் கீழ் 9 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- அனைத்து பங்குதாரர்களினதும் ஒத்துழைப்புடன் பில் போர்டுகள் மற்றும் களஞ்சிய கட்டுப்பாடு ஆகியவற்றில் ஒழுங்கு முறையை செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல் தொகுப்பு தயாரிக்கப்பட்டது.

மர நடுகைத் திட்டங்கள்

- மத்திய அதிவேகப் பாதையில் மீரிகம இடமாற்றம் மற்றும் கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, பேலியகொட ஆகிய இடங்களில் மர நடுகை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- மலை தினத்தைக் கொண்டாடும் வகையில் டெல்கSலந்த, குண்டசாலையில் மர நடுகை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- COP 28 திட்டத்தின் கீழ், 4 நெல்லி மரக் கன்று நடுகை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

பயிற்சித் திட்டங்களின் கீழ் ஒன்பது ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன், ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கியதாக 612 ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.

25 மாவட்டங்களில் 25 தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு, 1,930 பேருக்கு சுற்றுச் சூழல் முன் மாதிரி தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்டது.

ட்டு இளைஞர் கழக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய 527 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

23 மாவட்டங்களை ஒருங்கிணைத்து ஒரு இலத்திரனியல் செய்தி மடல் வெளியிடப்பட்டது.



ஜனாதிபதி பதக்கம் வழங்கும் விழா

சுற்றுச் சூழல் முன்னோடித் திட்டத்தின் முக்கிய அங்கமாக, ஜனாதிபதி பதக்கம், விருது வழங்கும் விழா 2023 மே மாதம் 11 அன்று நடைபெற்றதுடன், பதக்கம் வென்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

